விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 17.03.2021 புதன்கிழமை | இதழ் : 107 | பக்கங்கள் : 16



04 கோவை தெற்கு தொகுதியில் கமல்ஹாசன் தீவிர பிரசாரம்



07 பஸில் ராஜபக்ஷவையும் ஆதரிக்க நாங்கள் தயார்!



10 ஒருமித்த இலங்கைக்குள் தமிழருக்கு நீதி அவசியம்



13 மெஸ்ஸி புதிய சாதனை!

# ஜெனிவா பிரேரணையில் 40 நாடுகள் கையொப்பம்?

## இலங்கைக்கு அதிகரிக்கும் நெருக்கடி

ஜெனிவா, மார்ச் 17

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரிட்டன் தலைமையிலான நாடுகளால் கொண்டுவரப்படும் பிரேரணையில் 40 நாடுகள் கையொப்பமிடவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால், பிரேரணையைத் தோற்கடிப்பது என்பது இலங்கைக்கு மிகவும் நெருக்கடியானதாக அமைந்திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரேரணையின் இறுதி வரைபு அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதில் கைச்சாத்திடவுள்ள நாடுகளில் மார்ஷல் தீவுகளும், மலாவியும் மட்டும் தான் ஐரோப்பியா அல்லாத நாடுகளாகும். தற்போது கையொப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட 40

15

# ஆதாரங்களை பாதுகாக்கும் பொறிமுறை திட்டவட்டாக நிராகரிக்கும் அரசாங்கம்!

## வெளிவிவகார செயலாளர் ஜயநாத் கொலம்பகே அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

போர்க் குற்றங்கள் குறித்த எதிர்கால விசாரணைகளுக்காக ஆதாரங்களை பாதுகாப்பதற்கான அமைப்பினை உருவாக்கவேண்டும் என்ற கோரிக்கையை இலங்கைஅரசாங்கம் நிராகரித்துள்ளது. அவ்வாறான பொறிமுறைக்கு அரசாங்கம் இணங்காது, அனுமதியளிக்காது என வெளிவிவகார செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

15

# பாக். தூதுவர்- தினேஷ் நேற்று திடீர் சந்திப்பு



கொழும்பு, மார்ச் 17

வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவிற்கும் பாகிஸ்தானின் தூதுவருக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று

15

# மனித உரிமைகள் ஆணையாளரை இலங்கைக்கு அழைக்க ஆலோசனை



கொழும்பு, மார்ச் 17

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்செலெட் இலங்கைக்கு அழைப்பது தொடர்பாக அரசாங்கம் தீவிரமான ஆராய்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

மனித உரிமை ஆணை

15

# ரயில் - பஸ் மோதி விபத்து: 9 வயது மாணவன் மரணம்!

## 24 பேர் காயம்: மன்னாரில் துயரம்



மன்னார், மார்ச்.17

தலைமன்னார் ரயில் கடவையில் இடம்பெற்ற கோர விபத்தில் 9 வயது மாணவன் உயிரிழந்ததுடன், 24 பேர் காயமடைந்தனர்.

மன்னார் - தலைமன்னார் ரயில் கடவையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இந்தக் கோர விபத்து இடம்

15

# அசாத் சாலி கைது

கொழும்பு, மார்ச் 17.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் வைத்து அசாத் சாலி கைது செய்யப்பட்டார்.

சட்டமா அதிபரின் ஆலோசனையின் பெரில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். பயங்கரவாதத் தடைச் சட்டத்

15

# 9 வயது மாணவி உட்பட 3 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணத்தில் மேலும் 3 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று செவ்வாய் கிழமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் பருத்தித்துறையைச்

15

# இந்தியாவின் அழுத்தத்தால் மாகாண சபைத் தேர்தலா?

## அப்படி ஏதுமில்லை என்கிறது அரசு

கொழும்பு, மார்ச் 17

இந்தியா அல்லது அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு மத்தியில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கவில்லை என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

15

# பேராயர் சர்வதேசத்தை நாடுவது நாட்டை காட்டிக்கொடுப்பதாகும்

## விசனிக்கிறார் அமைச்சர் சரத் வீரசேகர

கொழும்பு, மார்ச் 17

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாகவே இயங்குகின்றது. இங்கு என்ன பிரச்னைகள் இடம்பெற்றாலும் அதற்கு உள்நாட்டு நீதித்துறை நீதியை வழங்கியே தீரும். அதைவிடுத்து சர்வ

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## பேராயர்...

தேசத்திடம் பேராயர் நீதியை எதிர்பார்ப்பது நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு ஒப்பானதாகும்.”

-இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் நீதியைப் பெற்றுத் தருவோம் என்று நாட்டு மக்களுக்கு அரசு உறுதியளித்திருந்தது. எனவே, அரசியல் நலன் கருதி குற்றவாளிகளைப் பாதுகாக்கும் விதத்தில் அரசு செயற்பட்டால் நாம் சர்வதேச நீதிமன்றத்தின் உதவியை நாட நேரிடும் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்“ என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்த கருத்துக்கு ஊடகங்களிடம் அமைச்சர் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில்தான் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடைபெற்றது. உலக பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ். அமைப்பின் இஸ்லாமிய அரசு அமைக்கும் நோக்குடனேயே இலங்கையிலும் உயிர்த்த ஞாயிறு தினத்தில் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடந்த ஆட்சியில் தேசிய பாதுகாப்பு பலவீனமாக இருந்த காரணத்தாலேயே இங்கு தாக்குதலை சஹ்ரான் குழுவினர் இலகுவாக நடத்தினர்.

எமது அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மறைந்திருந்த உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபட்டவர்களைக் கைதுசெய்தோம்.

எனவே, இந்தத் தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் தண்டனையை நிச்சயம் வழங்குவோம். பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்கு நீதி கிடைத்தே தீரும். இதைவிடுத்து சர்வதேசத்திடம் பேராயர் நீதியை எதிர்பார்ப்பது நாட் டைக் காட்டிக் கொடுப்பதற்கு ஒப்பான தாகும்-என்றார்.

## ஜெனிவா...

நாடுகளில் பெரும்பாலானவை ஐரோப்பிய நாடுகள் என்பதுடன், இதில் 12 நாடுகள் இம்முறை பேரவையில் வாக்களிக்கும் உரிமையைக் கொண்டிருக்கின்றன.

இணை அநுசரணையாக அல்லது மேலதிக இணை அநுசரணையாக இந்த 40 நாடுகள் பிரேரணையில் கையொப்பமிடவுள்ளன.

மார்ச் 22 ஆம் திகதி இந்தப் பிரேரணை மீதான வாக்களிப்பு இடம்பெறும். பிரேரணையையும், அதன் உள்ளடக்கத்தையும் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை இலங்கை அரசாங்கம் ஏற்கனவே தெரியப்படுத்தியிருக்கின்றது.

இலங்கை குறித்து எந்தவொரு தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்வதைத் தவிர்க்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பேரவையின் அங்கத்தவ நாடுகளைக் கேட்டிருந்தார். இருந்தபோதிலும் பிரேரணைக்கு ஆதரவு அதிகரித்து வருதை ஜெனிவா தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

கொரோனாவினால் மரணமடைபவர்களின் உடல்களை தகனம் செய்வதைக் கட்டாயமாக்கியிருந்த சட்டமூலத்தை வாபஸ் பெற்று அடக்கம் செய்வதற்கான அனுமதியையும் அரசாங்கம் தற்போது வழங்கியிருக்கின்றபோதிலும், பிரேரணையில் அந்த விவகாரமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதில் மாற்றத்தைச் செய்வதற்கு இணைத் தலைமை நாடுகள் மறுத்துவிட்டன.

இஸ்லாமிய நாடுகளின் ஆதரவைத் தக்கவைத்துக்கொள்வதற்காகவே அதனை மாற்றுவதற்கு இணைத் தலைமை நாடுகள் மறுத்ததாகக் கருதப்படுகின்றது.

தற்போதைய நிலையில் சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, கியூபா, பிலிப்பைன்ஸ், வெனிசூலா ஆகிய நாடுகள் இலங்கையை ஆதரிக்கின்றன.

## ஆதாரங்களை...

‘நாங்கள் வெளிப்படையாக இதனை நிராகரிக்கின்றோம். இது மனித உரிமை பேரவையின் ஆணைக்கு அப்பாற்பட்ட விடயம்’ என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தை நிராகரிப்பதற்கு இலங்கை தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே மேலும் தெரிவித்துள்ளார்.

நியாயமற்ற பக்கச்சார்பான தீர்மானத்தை அரசாங்கம் எதிர்க்கின்றது என குறிப்பிட்டுள்ள அவர், தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு விடுமாறு வேண்டுகோள் விடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையினை நாங்கள் ஏற்கனவே இரண்டு தடவை நிராகரித்துள்ளோம். இந்த தீர்மானம் அதனை அடிப்படையாக கொண்டது என தெரிவித்துள்ள அவர், தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பை நடத்துமாறு வேண்டுகோள் விடுப்பது குறித்து நட்பு நாடுகளுடன் ஆராய்ந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து தகவல்களைச் சேகரிப்பது, பாதுகாப்பது என்பதற்காக இலங் கையிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் விஷேட பொறிமுறை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என பிரிட்டன் தலைமையி லான நாடுகள் தயாரித்துள்ள இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மனித உரிமைகள்...

யாளர் இலங்கையை கடுமையாக சாடும் அறிக்கையை வெளியிட்ட பின்னர், இது குறித்து அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் ஆராயப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் காணப்படும் நிலைமைகளை மனித உரிமை ஆணையாளர் நேரில் பார்வையிடுவதற்காக அவரை இலங்கைக்கு அழைப்பது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

அது குறித்து ஆராயப்படுகிறது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே உறுதிப்படுத்தினார். எனினும் இறுதி முடிவு எதனையும் எடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தற்போதைய அமர்வின் இறுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கான அழைப்பு விடுக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

## இந்தியாவின்...

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறுகின்றது. இந்த விடயத்துக்கும் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் அமைச்சர் இதன்போது கூறினார்.

முன்னைய அரசாங்கத்தினால் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட பிரேரணையின்போது அது காலவரையறை இன்றி ஒத்திவைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதனால் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதில் ஏற்பட்ட சட்ட ரீதியிலான தடைகளை நீக்குவதற்காக அரசாங்கம் தற்போது நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மாகாண சபை எமது அரசியல் யாப்பில் 13ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

# பாடத்திட்டத்தில் சட்டம் ஒரு பாடம்: ஆராய பாராளுமன்ற குழு நியமனம்!

கொழும்பு, மார்ச் 17

பாடசாலை பாடத்திட்டத்தில் ‘சட்டத்தை’ ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கு பொருத்தமான பொறிமுறையொன்றை தயாரிக்க பாராளுமன்ற உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோரின் தலைமையில் அண்மையில் கூடிய இரு அமைச்சுக்களும் இணைந்த ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இந்த உபகுழு நியமிக்கப்பட்டது.

கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக் கல்வி மேம் பாட்டு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் களான ரவூப் ஹக்கீம், சிவஞானம் சிறி தரன், வீரசுமண வீரசிங்ஹ, சாகர காரிய வசம், அமரகீரித்தி அத்துகோரல, டயனா கமகே, (மேஜர்) சுதர்ஷன தெனிப்பிட் டிய உள்ளிட்ட எட்டுப்பேரைக் கொண்ட குழுவே இவ்வாறு நியமிக்கப்பட்டுள் ளது. இதன் செயலாளராக பாராளுமன் றத்தின் உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே. ஜயதிலக செயற்படுவார்.

இங்கு கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர் அலி சப்ரி குறிப்பிடுகையில்-

சட்டம் தொடர்பில் பொதுமக்களின் அறிவு மிகவும் குறைவான மட்டத்திலேயே காணப்படுவதாகவும், சட்டம் தொடர்பான அடிப்படைப் புரிதலை நாட்டிலுள்ள மாணவர்களுக்கு வழங்குவது மிகவும் முக்கியமானதாகும்-என்றார்.

முன்னேற்றமடைந்த நாடுகளில் அடிப்படைச் சட்டம் தொடர்பில் குடியியல் கல்வி வழங்கப்படுவதாகவும், பாடசாலை பாடத்திட்டத்தில் சட்ட அறிவை இணைப்பது அவசர தேவை என்றும் நீதி அமைச்சர் வலியுறுத்தினார்.

பாடசாலைப் பாடத்திட்டத்தில் சட்டத்தை ஒரு பாடமாகக் கொண்டுவருவது தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட இந்தக் குழு தனது யோசனைகள் அடங்கிய அறிக்கையை ஒரு மாத காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார். இதன் பின்னர் நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய சட்டம் பாடத்திட்டத்தில் விரைவில் உள்ளடக்குவதற்கு நட வடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

# நேற்று 2 கொரோனா மரணங்கள் பதிவு

கொழும்பு, மார்ச் 16

கொரோனாவினால் நேற்றைய தினம் இரு மரணங்கள் பதிவாகியுள்ளன. இதன் மூலம் இலங்கையில் கொரோனாவினால் மரணமானவர்களின் எண்ணிக்கை 534 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளையில், கொரோனா தொற்றாளர்களாக மேலும் 154 பேர் நேற்று மாலை வரை அடையாளம் காணப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

## 9 வயது மாணவி உட்பட...

சேர்ந்த 9 வயது மாணவி என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

“யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் 264 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அவர்களில் எவருக்கும் தொற்று இல்லை.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 465 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன. அவர்களில் 3 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மன்னார் வைத்தியசாலையில் இருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட பெண் ஒருவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. அவர் வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டு பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டார். அவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு சுயதனிமைப் படுத்தப்பட்டிருந்த ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர் யாழ்ப்பாணம் நகரில் வசிப்பவர்.

பருத்தித்துறையில் குடும்பம் ஒன்றில் சிலருக்கு கோரோனா தொற்று ஏற்பட்ட நிலையில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த 9 வயது மாணவிக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது” என்றும் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## பாக். தூதுவர்...

இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் நிகாப்பினை தடை செய்வது குறித்து தூதுவர் அதிருப்தி வெளியிட்ட மறுதினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அது தொடர்பாகவும் ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் குறித்தும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டிக்கலாம் எனத் தெரிகின்றது.

## ரயில் - பஸ்...

பெற்றது.

பாடசாலை மாணவர்களை ஏற்றிக் கொண்டு தலைமன்னார் நோக்கிப் பயணித்த தனியார் பஸ் கொழும்பில் இருந்து தலைமன்னார் நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் காயமடைந்ததுடன், அவர்களில் சிலர் மன்னார் பொது வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பற்ற ரயில் கடவையை பஸ் கடக்க முயன்ற நிலையில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் அதிகமாக பாடசாலை மாணவர்களே காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## அசாத்...

தின் கீழ் அவர் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்க ப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் ஊடக சந்திப்பு ஒன்றில் அவர் தெரிவித்த கருத்துக்கள் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டிருக்கினறார்.

## தமிழக...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

எது எப்படியிருந்தபோதிலும், தமிழகம் இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக எதனையும் பிரஸ்தா பிக்கலாம். ஆனால், இந்திய மத்திய அரசாங்கத்தினால் மட்டுமே இராஜ தந்திர ரீதியாக இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து ஆக்கபூர்வமாக எதனையும் செய்யமுடியும். இத னையே இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர், தமிழக அரசியலில் இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து பிஸ்தாபிக் கப்படுபவை பற்றி, தமது கண்ணோட்டமாக வெளிப்படுத்தியுள்ளார்.

## இதுவும் நடந்தது!

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சராக இருப்பவர் தமிழ்நாட்டுக்காரரான கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர். நமது அரசியல் தலைவர்கள், அவர்களின் 'ஆளுமைகள்' பற்றி நம்மவர்களை விட அதிகம் தெரிந்துவைத்திருப்பவர்.

இரண்டு தினங்களுக்கு முன்னர் தமிழகத்தில் வைத்து அவர் தமிழக அரசியல் கட்சிகளுக்கு வழங்கிய அறிவுரை கவனிக்கத்தக்கது.

தமிழகத்தில் ஏப்ரல் ஆறாம் திகதி சட்டசபைக்கான தேர்தல் நடைபெறவிருக்கின்றது. தேர்தலை ஒட்டி தமிழகத்தின் பிரதான அரசியல் கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் தத்தமது தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருந்தன. இந்த இரண்டு கட்சிகளினதும் தேர்தல் அறிக்கையிலும் வழக்கம்போல ஈழத்தமிழர்கள் மீதான கரிசனை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

இது பற்றிக் குறிப்பிட்டுள்ள கலாநிதி ஜெய்சங்கர், இலங்கைத் தமிழர் மீதான இந்தக் கரிசனை தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக ஆரம்பித்து, தேர்தல் முடிவடைந்ததும் முடிவடையும் விவகாரமாகிவிடக் கூடாது என்று தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் மாகாணசபைகளுக்கு எதிரான கருத்துக்கள் அண்மைக்காலமாக குறிப்பாக ராஜபக்ஷ அரசு மீண்டும் பதவியேற்றதிலிருந்து தீவிரம்பெற்றிருப்பதை அவதானிக்கலாம். அண்மையில் கொழும்புக்கு வந்திருந்த ஜெய்சங்கரும், தன்னைச் சந்தித்த தமிழ் தலைவர்களிடம் அரசின் இந்தப் போக்குக் குறித்து பூடகமாக கருத்துத் தெரிவித்திருந்ததாக அவரைச் சந்தித்த தலைவர் ஒருவர் தெரிவித்திருந்தார். புதிய அரசியல் அமைப்பு ஒன்றை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் ராஜபக்ஷ அரசாங்கம், பதின்மூன்றை இல்லாமல்செய்யலாம் என்ற அவரது அனுமானத்தை தமிழ் தலைவர்களுக்கு அவர் தெரிவித்திருந்தது ஏன் என்பதைக் கூட நமது தலைவர்கள் புரிந்து கொண்டிருப்பார்களோ தெரியவில்லை.

ஆனால் பதின்மூன்றையும் அதனால் விளைந்த மாகாண சபைகளையும் பாதுகாக்க வேண்டும் என்பதில் அவர் எவ்வளவு உறுதியாக இருக்கிறார் என்பதை, அண்மையில் ஜெனிவாவில் பேசிய இந்தியப் பிரதிநிதியின் பேச்சிலிருந்து உணரலாம். ஜெனிவாவில் இந்தியப் பிரதிநிதியின் பேச்சு என்பது ஜெய்சங்கரின் கருத்துத்தான் என்பது ஒன்றும் ஆராய்ச்சிக்குரியதல்ல.


மாகாணசபைகள் நமக்கு முழுமையான தீர்வை தந்ததா அல்லது தருமா என்பதல்ல இப்போது விவாதத்திற்குரியது. அதனை வழங்கவேண்டும் - முறையாக வழங்க வேண்டும் என்று இந்தியா பிடிவாதமாக இருக்கும்போது அதனை நாம் இறுகப் பற்றிக்கொள்ளவேண்டாமா? ஆகக் குறைந்தது அடுத்த வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்க வேண்டும் என்று விரும்புகின்ற தலைவர்கள் கூட அதனை பற்றிப்பிடிப்பதாக தெரியவில்லை.

ஜெனிவாவில் தான் கொண்டுவருகின்ற தீர்மானத்திற்கு இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்காக பதின்மூன்றை தனது தீர்மானத்தில் சேர்க்கின்றது பிரிட்டன். ஆனால் அந்த பதின்மூன்றை அனுபவிக்கப்போகின்ற நாங்கள் அதனைக் கண்டுகொள்ளாமல் இருக்கின்றோம்.

தமிழ் தலைவர்களிலயே மாகாண முதல்வராக முழுப்பதவிக்காலமும் இருந்தவர் விக்னேஸ்வரன் ஒருவர்தான். வரதர் இரண்டு வருடம் கூட இருக்கவில்லை. பிள்ளையான் தனது முழுப்பதவிக்காலமும் இருப்பதற்கு முன்னதாகவே சபை கலைக்கப்பட்டு தேர்தல் நடந்தது.

மாகாணசபை முதல்வர் பதவியில் அமர்ந்ததும், விக்கினேஸ்வரன் ஐயா, கால்கள் முறிந்த கதிரையொன்றில் தன்னை இருத்தியிருப்பதாக கூறியிருந்தார். அவருக்குத்தான் தெரியும் அந்தக் கதிரையில் எந்தக் கால் உடைந்திருக்கின்றது என்பது. அதனை அவர் சொன்னால்தானே கதிரையின் கால்களை திருத்தி ஒருவரை அமரவைக்கமுடியும்!.

- ஊர்க்குருவி.





# நில ஆக்கிரமிப்பு குறித்து ஆராயும் சர்வதேச மாநாடு

## விக்கி ஏற்பாடு சம்பந்தன் நவநீதம்பிள்ளை முக்கிய உரை

யாழ்ப்பாணம், மார்ச் 16

தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களான வடக்கு- கிழக்கில் தீவிரம் அடைந்துள்ள நில அபகரிப்பு தொடர்பிலும் இதற்கெதிராக மேற்கொள்ளவேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வதற்காக பாராளுமன்ற உறுப்பினரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் "தமிழர் தாயகத்தை இழத்தல்: தமிழர் நிலத்தை பாதுகாப்பதற்கான உபாயங்களை வகுத்தலும் பிரச்சினைகளை இனம்காணுதலும்" என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிரித்தானிய நேரப்படி பிற்பகல் 12.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை (இலங்கை நேரம் மாலை 6.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை) சூம் (zoom) தொழில்நுட்பம் மூலம் நடைபெறும்.

இந்த மாநாட்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஆர். சம்பந்தன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு நீதியரசர் விக்னேஸ்வரனுடன் இணைந்து இம் மாநாட்டை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த மாநாட்டில் ஐ.நா. மனித உரிமைகள் சபை முன்னாள் உயர்ஸ்தானிகரும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதியரசருமான திருமதி நவநீதம் பிள்ளை, பிரித்தானியாவின் சர்வதேச புகழ்பெற்ற முன்னணி வழக்குரைஞரும் பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டொனி பிளயரின் பாரியருமான செரி பிளயர் மற்றும் கனடாவின் சிறப்புமிக்கோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவரும் 2010 ஆம் ஆண்டு மனித உரிமைகள் செயற்பாடுகளுக்காக நோபல் பரிசுக்கு முன்மொழியப்பட்டவருமான சர்வதேச மனித உரிமைகள் வழக்குரைஞர் டேவிட் மாடஸ் ஆகியோரும் இந்த மாநாட்டில் முதன்மை உரை ஆற்றுகின்றார்கள்.

இந்த மாநாட்டில் எல்லாமாக நான்கு அமர்வுகள் இடம்பெறவுள்ளன. முதலாவது அமர்வு "வடக்கு - கிழக்கில் தமிழர் நிலங்கள் சட்டவிரோதமாக அபகரிக்கப்படுதல்" என்ற தலைப்பில் நடைபெறும். இந்த அமர்வில் வடக்கு - கிழக்கில் நடைபெறும் நில அபகரிப்பு தொடர்பில் 'முடிவற்ற போர்' என்ற ஆய்வு அறிக்கையை வெளியிட்ட அமெரிக்க சிந்தனை மையமான ஒக்லாண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனுராதா மிட்டால், ஒபாமா நிர்வாக வெள்ளை மாளிகை உத்தியோகத்தரும் தற்போது வட கரோலினா மாநிலத்தின் செனட்டருமான வெய்லி நிக்கல், மாற்று கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சியாளர் பவானி பொன்சேகா, முன்னாள் மாகாண காணி ஆணையாளர் குருநாதன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இரண்டாவது அமர்வு "நில அபகரிப்பு தொடர்பிலான சட்ட மற்றும் அரசியல் சவால்கள் மற்றும் பரிகாரங்கள்" என்ற கருப்பொருளில் நடைபெறும். இந்த அமர்வில் யாழ் மாவட்ட மேல் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, முன்னணி சட்டத்தரணி கே. எஸ். ரட்ணவேல், வடக்கு -கிழக்கு சிவில் அமைப்புக்கள் சார்பில் தவத்திரு வேலன் சுவாமிகள், வட மாகாண முன்னாள் அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மூன்றாவது அமர்வு "நிலம், வெளிநாட்டு முதலீடு மற்றும் இருதரப்பு முதலீட்டு உடன்படிக்கைகள்" என்ற தலைப்பில் நடைபெறும். இந்த அமர்வில், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் தகைசார் பேராசிரியரும் "வெளிநாட்டு முதலீடு தொடர்பிலான சட்டம்" என்ற பிரபல்யம்மிக்க நூலை எழுதியவருமான கலாநிதி எம். சொர்ணராஜா, யாழ் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை முன்னாள் பேராசிரியர் வி. நித்தியானந்தம், பிரித்தானியா நோட்டிங்காம் பல்கலைக்கழக சர்வதேச மனித உரிமைகள் பேராசிரியர் கலாநிதி தமிழ் ஆனந்தவிநாயகன், சட்டத்தரணி வெரோனிகா பாவ்லோஸ்காயா, மனித உரிமைகள் ஆலோசகர் லொரான்ஸோ பியோரிட்டோ ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

புலம்பெயர் தமிழ் இளையோர்கள் கலந்துகொள்ளும் அமர்வு ஒன்று இறுதியாக நடைபெறும்.

தமிழர் தாயகத்தில் நடைபெறும் நில அபகரிப்பை தடுக்கும் வழிவகைகளை ஆராயும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு தொடர்ந்தும் கால இடைவெளி விட்டு நடைபெறும். இந்த மாநாட்டின் இரண்டாவது பகுதி மே மாதம் அளவில் நடைபெறும். அதன்போது வடக்கு - கிழக்கில் நடைபெறும் நில ஆக்கிரமிப்பு பற்றிய ஆவணப் படம் ஒன்று வெளியிடப்படும்.

எதிர்வரும் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும் இம் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு எல்லா தமிழ் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படுகின்றது. இந்த மாநாட்டில் எவரும் கலந்துகொள்ளலாம். இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. சமூக வலைத்தளங்களிலும் இந்த மாநாடு நேரடியாக காண்பிக்கப்படும்.

MARCH 20, 12:30 - 5:30 PM (UK Time)
Zoom Meeting ID: 925 7244 2450
Web link: http://bit.ly/TamilLand
Passcode: 238923


கல்வி tv
CHANNEL-1

**காலை**

| | | |
|---|---|---|
| 5.15 மணி | - | தரம் 06 தமிழ் |
| 6.00 மணி | - | தரம் 07 விஞ்ஞானம் |
| 6.45 மணி | - | தரம் 08 கணிதம் |
| 7.30 மணி | - | தரம் 09 வரலாறு |
| 8.15 மணி | - | தரம் 10 விஞ்ஞானம் |
| 9.00 மணி | - | க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ் |
| 10.00 மணி | - | பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல் |
| 11.00 மணி | - | க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம் |
| 12.00 மணி | - | தரம் 06 தமிழ் |

**பகல்**

| | | |
|---|---|---|
| 1.00 மணி | - | தரம் 07 விஞ்ஞானம் |
| 2.00 மணி | - | தரம் 08 கணிதம் |
| 3.00 மணி | - | க.பொ.த சாதாரண தரம் விவசாயம் |
| 3.40 மணி | - | க.பொ.த சாதாரண தரம் சுத்தோலிக்கம் |
| 4.20 மணி | - | க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம் |
| 5.00 மணி | - | க.பொ.த சாதாரண தரம் கணிதம் |
| 5.40 மணி | - | க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம் |
| 6.20 மணி | - | க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள் |
| 7.00 மணி | - | க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள் |

Eelanadu ஈழநாடு
17.03.2021 புதன்கிழமை
சார்வரி, பங்குனி 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# சர்வதேசம் தரக்கூடிய நீதி

இலங்கை தொடர்பான புதிய பிரேரணை இன்னும் ஒருசில தினங்களில் வாக்கெடுப்பிற்கு விடப்படும். இதில் இனி மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் 46 உறுப்பு நாடுகளுடன் கலந்துரையாடியே இந்த வரைபு இறுதிசெய்யப்பட்டுள்ளது. கோஷங்களை முன்வைப்பதுபோல் இந்த விடயம் இலகுவானதல்ல. ஒப்பீட்டடிப்படையில் இது பலவீனமானதொரு பிரேரணை என்றவாறான விமர்சனங்கள் தமிழர் தரப்பில் ஆங்காங்கே முன்வைக்கப்படுவதை காணமுடிகின்றது. ஆனால், ஒருவேளை இவ்வாறானதொரு பிரேரணை கொண்டுவரப்படாமல் இருந்திருந்தால் இலங்கை, மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சிநிரலிலிருந்து வெளியில் சென்றிருக்கும்.

ஏனெனில், கடுமையானதொரு பிரேரணையை கொண்டுவரக்கூடிய நிலைமை அங்கில்லை. ஆனால், பிரேரணையின் வரைபு இறுதிசெய்யப்பட்ட பின்னரும்கூட, தமிழர் தரப்பினர் மத்தியில் ஆங்காங்கே எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கையை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்லுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால், நிச்சயம் இந்த கோரிக்கைகள் கண்டுகொள்ளப்படப்போவதில்லை. ஏற்கனவே, பொத்துவில் தொடங்கி பொலிகண்டிவரையில் பெருந்திரளான மக்கள் திரட்சியை காண்பித்த பின்னரான சூழலில்தான் இவ்வாறான விடயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இதனை தமிழர் தரப்புக்கள் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த பிரேரணை தொடர்பில் கருத்துத் தெரிவித்திருக்கும் நாடு கடந்த அரசாங்கம் எனப்படும் அமைப்பின் தலைவர் உருத்திரகுமாரன், இந்தப் பிரேரணையின் ஊடாக மீளவும் பொறுப்புக் கூறலிற்கான பொறுப்பு இலங்கையிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. இது, முற்றிலும் ஆட்சி மாற்றத்திற்கான பிரேரணையாகும் என்று தெரிவித்திருக்கிறார். ஆனால், அவரது பார்வை தவறானது. இதுவரையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட அனைத்து பிரேரணைகளுமே பொறுப்பு கூறலுக்கான பொறுப்பை இலங்கையிடம்தான் ஒப்படைத்திருந்தன. இலங்கைக்குள் விடயங்களை மேற்கொள்ளுமாறுதான் வலியுறுத்தியிருந்தன. இந்த அடிப்படையில்தான் தற்போதைய பிரேரணையும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

புதிய அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைக்க மறுத்திருக்கின்ற நிலையில், பொறுப்புக் கூறலுக்கான சர்வதேச நிகழ்ச்சிநிரலிருந்து இலங்கை வெளியேற முடியாதவாறு, இந்தப் பிரேரணை ஒரு பூட்டை போட்டிருக்கின்றது. அரசாங்கம் ஒத்துழைக்க மறுக்கின்ற நிலையில் பேரவையால் வேறு எதனையும் பெரிதாக செய்துவிட முடியாது. இந்த நிலையில்தான், மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் கடுமையானதோர் அறிக்கையை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையில் உள்ளவற்றை பிரேரணையில் உள்ளடக்க முடியாவிட்டாலும்கூட, அதனை ஓர் ஆதாரமாக் கொண்டு ஐரோப்பிய நாடுகள் தங்களது சொந்த நியாயாதிக்கத்திற்குள் சில முடிவுகளை எடுக்கமுடியும். இதனை, குறித்த நாடுகள் எப்போது வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். இந்த விடயம் தமிழர்களுக்கு சாதகமான ஒன்றுதான். ஆனால், இங்கு விளங்கிக்கொள்ளப்பட வேண்டிய விடயம், சர்வதேசத்தால் தமிழர்களுக்கான தீர்வை தட்டில் வைத்து தரமுடியாது. குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடொன்று தொடர்பாக, ஓர் எல்லைக்கு மேல் ஐ. நா. வின் ஏனைய உறுப்பு நாடுகள் தலையீடுகளை செய்யமுடியாது.

எனவே, தமிழர்கள் எத்தனை பேரணிகளை செய்தாலும், உண்ணாவிரதங்களை மேற்கொண்டாலும், இந்த கட்டமைப்புக்கள் நடக்கக்கூடிய விடயங்கள்தான் இடம்பெறும். இதனை விளங்கிக் கொண்டுதான் தமிழர்கள் தங்களின் எதிர்பார்ப்புக்களை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

## தமிழக அரசியலில் இலங்கை தமிழர் பிரச்னை:
# ஜெய்சங்கரின் கண்ணோட்டம்!

- அலசுவது இராஜதந்திரி -

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தமிழ்நாடு மாநில அரசியலில் இலங்கைத் தமிழர் விவகாரம் கையாளப்படுவது குறித்து மிகத் துல்லியமான முறையில் தமது கருத்து கண்ணோட்டத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் 1987ஆம் ஆண்டு இந்திய -இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து இலங்கைக்கு இந்திய அமைதிப்படை வந்திருந்தது. அச்சமயம் இலங்கையில் 1988 ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டுவரை ஓர் இராஜதந்திரியாக கடமையாற்றியவர் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப்படையின் அரசியல் ஆலோசகராகவும் பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வெளியுறவுச் செயலாளராக பணியாற்றியதோடு, இந்தியாவில் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட, முதலாவது இந்திய வெளிவிவகார அமைச்சு செயலாளராகவும் கலாநிதி எஸ். ஜெயசங்கர் விளங்குகிறார். இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர் பிரச்னையையோடு நன்கு பரிச்சயமானவர்களாகவே இந்திய வெளியுறவுத் துறையைச் சேர்ந்தவர்கள் காணப்படுகின்றனர்.

**நரசிம்மராவ் கொழும்பு வருகை**

1983ஆம் ஆண்டு இலங்கையில் ஜூலை கலவரம் வெடித்தபோது, அன்றைய இந்திய பிரதமர் இந்திரா காந்தியினால் நிலைமையை ஆராய்ந்துவர கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டவரே அன்றைய இந்திய வெளிவிவகார அமைச்சராக இருந்தவரும், பின்னாளில் இந்திய பிரதமராகவுமிருந்த பி. வி. நரசிம்மராவ் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய வெளியுறவத்துறையில் பணியாற்றிய தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் ஆகியோர் இலங்கையில் பெரிதும் பணியாற்றியோராகவே காணப்படுகின்றனர். இருந்தபோதிலும், இலங்கையில் ஓர் இராஜதந்திரியாக பணியாற்றி இந்திய வெளிவிவகார அமைச்சராகவந்த இந்திய வெளியுறவுத் துறையைச் சேர்ந்த முதலாவது முக்கியஸ்தராக ஜெய்சங்கர் விளங்குகிறார்.

**மோடியின் தெரிவு**

தமிழரானபோதிலும் புதுடில்லியல் பிறந்து வளர்ந்து, உயர்கல்வி பயின்று, இந்திய வெளியுறவுச் சேவையில் சேர்ந்து மிகுந்த அனுபவஸ்தராக இருந்த காரணத்தினால் பிரதமர் நரேந்திர மோடியினால் இந்திய வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக அரசியலில் இலங்கைத் தமிழர் தொடர்பாக வெளியிடப்படும் கருத்துக்கள் குறித்து ஓரிரு தினங்களுக்கு முன்னர் இந்திய செய்தி ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட கலாநிதி ஜெய்சங்கர், தமிழகத்தில் தேர்தல் காலத்தில் பேசப்பட்டு, தேர்தல் முடிவுற்றதும் பேசப்படாத ஒரு விடயமாக இலங்கைத் தமிழர் விவகாரம் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெய்சங்கரின் இந்த அபிப்பிராயம், இன்றைய சந்ததியின் தமிழக அரசியல் வாதிகளைப்பொறுத்தவரை பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால், இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரச்னை ஆயுதப்போராட்டமாக ஆரம்பித்த காலத்தில் தமிழகமே இலங்கையின் மிதவாத மற்றும் தீவரவாத அரசியல் போக்கைக் கொண்டவர்களுக்கு உளப்பூர்வமான முறையில் அடைக்கலம் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதுதவிர, ஆயிரக்கணக்கான வடக்கு-கிழக்கின் அப்பாவி தமிழர்கள் தமிழகம் நோக்கி அகதிகளாக சென்றபோது அவர்களுக்கும் தமிழகத்தில் ஆட்சியிலிருந்தவர்களே புகலிடமளித்திருந்தனர்.

ஆயினும், காலப்போக்கில் இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரச்னை விரிவடைந்தபோது, தமிழக அரசியலாளர்கள் மட்டுமல்ல. இந்தியாவில் ஆட்சியிலிருந்தோரும் இலங்கைத் தமிழர் பிரச்னையில் கூடுதல் கரிசனையை வெளிப்படுத்த தொடங்கினர். இன்று, தமிழகத்தில் தொண்ணூறாயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் இருந்துவருகின்ற நிலையில் இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர் பிச்னை ஒரு தவிர்க்க முடியாத விவகாரமாகவே இருக்கின்றது.

**எம். ஜி. ஆர் - பிரபாகரன் சந்திப்பு**

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக தலைவராகவும் தமிழக முதலமைச்சராகவும் இருந்த எம். ஜி. இராமச்சந்திரன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனை நேரில் சந்தித்து, இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக தமது கரிசனையை வெளிப்படுத்தியிருந்தார். ஆயினும், எம். ஜி. இராமச்சந்திரனின் வாரிசான மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவே தமிழகத்தில் ராஜிவ் காந்தி கொலைசெய்யப்பட்டதையடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்திருந்தார்.

இதேவேளை, திராவிட முன்னேற்ற கழக தலைவரும் முன்னாள் தமிழக முதலமைச்சருமான காலஞ்சென்ற கலைஞர் மு. கருணாநிதியும் இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக தமது கரிசனையை வெளியிட்டதோடு, இலங்கையில் வடக்கு-கிழக்கு யுத்தம் இடம்பெற்றபோது உண்ணாவிரதமிருந்து, யுத்தத்தை நிறுத்துமாறும் கோரியிருந்தார்.

இந்நிலையில், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6ஆந்திகதி தமிழக மாநில சட்டசபை தேர்தல் இடம்பெறவுள்ள தருணத்தில், தமிழகத்தின் முன்னணி அரசியல் கட்சிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் இலங்கைத் தமிழர் பிரச்னையையும் குறிப்பிட்டுள்ளதோடு, அப்பிரச்னைபற்றியும் தேர்தல் மேடைகளில் பிரஸ்தாபித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. (15ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 17 புதன்கிழமை
சார்வரி வருடம் - பங்குனி - 4
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : சதுர்த்தி




17.03.2021

**மேடம்**
அனுபவ அறிவு கூடுதலாகும். அங்கீகாரம் கிடைக்கும். உறவில் ஏற்பட்ட விரிசல் உங்கள் முயற்சியால் மறையும். பேச்சில் அறிவாற்றல் வெளிப்பட்டுப் பாராட்டு வரும்.

**இடபம்**
உங்கள் குடும்பத்தினர் அதிக செல்லம் கொடுப்பார்கள். வீட்டு வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள். தனிமை காரணமாக இருந்து வந்த வெறுப்பு தீரும்.

**மிதுனம்**
குழந்தைகளின் பக்குவமான செயலால் மகிழ்ச்சி ஏற்படும். பிள்ளைகளின் ஆரோக்கியம் பற்றிய சங்கடம் குறையும். மனம் போனபடி நடப்போரின் நட்பை விலக்கவும்.

**கடகம்**
குடும்பத்திற்கு சொந்தமான மனையை மீண்டும் அடைவீர்கள். மனக் குழப்பங்கள் நீங்கும். கலையார்வம் அதிகரிக்கும். அலுவலகத்தில் நீங்கள் பயந்த தொல்லைகள் ஏற்படாது.

**சிம்மம்**
வேலை தேடுவோருக்கு நல்ல வாய்ப்புகள் கூடிவரும். செயல் ஒன்றில் உறவினர் பக்கபலமாக இருந்து உதவுவார்கள். மன சாட்சி இடிக்கும் செயலைச் செய்ய வேண்டாம்.

**கன்னி**
சட்டவிரோத செயல் செய்யும் நபரிடமிருந்து விலகுங்கள். கடன் சம்பந்தப்பட்ட விஷயங்களில் எச்சரிக்கையாக இருங்கள். மற்றவருக்காக கையெழுத்திடுவதை தவிர்த்திடுங்கள்.

**துலாம்**
பெற்றோர், உடன்பிறந்தோருடன் உறவு சுமுகமாக இருக்கும். சிலருக்கு திருமணம் கை கூடும். தந்தையின் அன்பு கிடைக்கும். பணியிடத்தில் உங்கள் நிலைமையில் வளர்ச்சி காண்பீர்கள்.

**விருட்சிகம்**
உயர் கல்வி பற்றி அனுபவசாலியின் ஆலோசனை பெறுவீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். குடும்பத் தலைமுறை வளரும். குடும்பத்தினர் மீது பாசம் கொள்வீர்கள். கெடுபலன்கள் குறையும்.

**தனுசு**
அழகுணர்ச்சி அதிகரிக்கும். தடை நீங்கி நன்மைகள் உண்டாகும். ஆசிரியர்களுக்கு மதிப்பு உயரும். பண வரவு பற்றிய முயற்சி கூடும். உடன் பணிபுரிபவர்களால் சிறு சங்கடம் ஏற்பட்டு விலகும்.

**மகரம்**
குழந்தைகளிடையே உங்களின் முக்கியத்துவம் அதிகரிக்கும். சுறுசுறுப்பாக செயல்பட்டுப் பணிகளை முடிப்பீர்கள். எதிரிகளால் இருந்து வந்த பிரச்னை இப்போது தீரும்.

**கும்பம்**
அலுவலகத்தில் உங்களுக்கு திடீரென்று செல்வாக்கு கூடும். தம்பதிகளுக்குள் இருந்து வந்த மனக்கசப்புகள் அனைத்தும் தீரும். ஆதாயம் பெறுவீர்கள். பெண்கள் கவனமாக செயல்படுங்கள்.

**மீனம்**
எதிர்பாராத உதவி கிடைக்கும். நண்பர்களால் ஆதாயம் உண்டு. ஆரோக்கியமும், வெற்றியும் உண்டு. புறக்கணித்தவர் மதிப்பர். செயல், பேச்சு போன்றவற்றில் நிதானம் தேவை. தெளிவு உண்டாகும்.

# கோவை தெற்கு தொகுதியில் கமல்ஹாசன் தீவிர பிரசாரம்

சென்னை, மார்ச் 17

கோவை தெற்கு தொகுதிக் குட்பட்ட இடங்களில் நடைப் பயிற்சி சென்றும், பேருந்தில் சென்ற பொதுமக்களைச் சந்தித்தும், வியாபாரிகளைச் சந்தித்தும் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல் ஹாசன் நேற்றுக் காலை பிரசாரம் மேற்கொண்டார்.



கோவை தெற்கு தொகுதியில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் சார்பில், அதன் தலைவர் கமல் ஹாசன்போட்டியிடுகிறார். கோவை மாநகராட்சி மத்திய மண்டல அலுவலகத்தில், உள்ள தேர்தல் பிரிவு அலுவலரிடம், நேற்று முன் தினம் மனுத்தாக்கல் செய்த, கமல்ஹாசன், செய்தியாளர் களைச் சந்தித்துப் பேசினார்.

அதைத் தொடர்ந்து, நேற்று மாலை கோவை தெற்கு தொகுதிக்குட்பட்ட தேர்முட்டியில், மக்கள் நீதி மய்யம் சார்பில் நடந்த தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு, கமல் ஹாசன் பேசினார். அதைத் தொடர்ந்து, ரேஸ்கோர்ஸில் உள்ள நட்சத்திர விடுதியில் நேற்று முன் தினம் இரவு கமல்ஹாசன் தங்கினார். நேற்றுக் காலை தான் தங்கியிருந்த இடத்தில் இருந்து, அருகேயுள்ள, ரேஸ் கோர்ஸ் நடைபாதைக்கு கமல்ஹாசன், தனது மெய்க்காவலர்கள் யாரும் இல்லாமல் வந்தார். அவரது உதவியாளர் மட்டும் அவருடன் வந்திருந்ததாகத் தெரிகிறது. முகக்கவசத்தை அணிந்தபடி, ரேஸ் கோர்ஸ் நடைபாதையில், கமல்ஹாசன் நடைப்பயிற்சி மேற்கொண்டார். முதலில் கமல்ஹாசன் நடைப் பயிற்சி மேற்கொண்டது அங்கிருந்த யாருக்கும் தெரியவில்லை. சிறிது நேரத்துக்குப் பின்னரே, கமல்ஹாசன் நடைப்பயிற்சி மேற்கொண்டதை அங்கிருந்த பொது மக்கள் கவனித்தனர். சிலர் ஆர்வத்துடன் அவருடன் பேசி, அவரது வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

சிறிது நேர நடைப்பயிற்சிக்கு பின்னர், அங்கிருந்த நடைபாதையை ஒட்டியவாறு அமைந்துள்ள தேநீர் கடைக்குச் சென்ற மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், அங்கிருந்த பொது மக்களிடம் பேசி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.



# அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்க நடவடிக்கை
## காங்கிரஸ் தேர்தல் அறிக்கை

சென்னை, மார்ச் 17

பூரண மதுவிலக்கு, நீட் தேர்வு ரத்து, அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்குவதற்கான நடவடிக்கை உள்ளிட்ட வாக்குறுதிகள் இடம்பெற்றுள்ள தேர்தல் அறிக்கையை தமிழக காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ளது.

தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை நேற்று தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் கே.எஸ். அழகிரி வெளியிட்டார். எஸ். பீட்டர் அல்போன்ஸ் தலைமையிலான குழு இந்தத் தேர்தல் அறிக்கையை உருவாக்கியிருக்கிறது.

அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை, கேள்வி கோரல் பெறுவதில் வெளிப்படைத்தன்மை, அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்க நடவடிக்கை, பூரண மதுவிலக்கு உள்ளிட்ட அம்சங்களை முக்கிய வாக்குறுதியாக இந்தத் தேர்தல் அறிக்கையில் காங்கிரஸ் கட்சி முன்வைத்துள்ளது.

இது தவிர, பின்வரும் விஷயங்களை தனது தேர்தல் அறிக்கையில் முன்வைத்துள்ளது காங்கிரஸ் கட்சி:

மாநகராட்சிகளுக்கான தேர்தல்களை நடத்த வலியுறுத்துவது, உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்கனவே இருந்த அதிகாரங்களை மீண்டும் வழங்க வலியுறுத்துவது, உள்ளாட்சி அமைப்புகள் அனைத்திற்கும் தேர்தலை நடத்த வலியுறுத்துவது, மத்திய அரசின் பணிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் புறக்கணிக்கப்படுவதாக கருதுவதால், அந்தப் பணிகளில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இட ஒதுக்கீடு வழங்கச் சொல்லி வலியுறுத்துவது, யுபிஎஸ்சியின் ஒரு கிளையை தென் மாநிலங்களில் அமைக்கச் சொல்வது, தமிழகத்தில் உள்ள அரசுப் பணிகளில் 74 சதவீதம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களையே பணியமர்த்தச் செய்ய சட்டம் இயற்றுவது, புதிய தொழில்களைத் துவங்கவும் முதலீடுகளை ஈர்க்கவுமான திட்டங்கள் ஆகியவற்றை தனது தேர்தல் அறிக்கையில் காங்கிரஸ் கட்சி முன்வைத்துள்ளது.

# சேலத்தில் நடந்து சென்று வாக்கு சேகரித்த ஸ்டாலின்

சென்னை, மார்ச் 17

தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று சேலத்தில் திமுக வேட்பாளரை ஆதரித்துப் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் போட்டியிடுவதற்காக நேற்று முன் தினம் வேட்புமனுத் தாக்கல் செய்தார். பின்னர், திருவாரூரில் இருந்து பிரசாரத்தைத் தொடங்கினார்.

இந்நிலையில், நேற்று ஸ்டாலின் சேலம் சத்திரம் பால் மார்க்கெட்டில் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். சேலம் வடக்கு தொகுதி திமுக வேட்பாளர் ராஜேந்திரனை ஆதரித்து ஸ்டாலின் வீதி, வீதியாகச் சென்று பொது மக்களைச் சந்தித்து வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார்.

செவ்வாய்பேட்டை, சத்திரம் பால் மார்க்கெட் உள்ளிட்ட பகுதிகளில் ஸ்டாலின் நடந்து சென்றபடி பொதுமக்களிடம் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது பொதுமக்கள் பலரும்ஸ்டாலின்உடன்செல்பி எடுத்துக்கொண்டனர்.

அதேபோல, வணிக நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், ஸ்டாலினுக்குக் கைகொடுத்து தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். சேலம் பகுதியில் அரை மணிநேரத்திற்கு மேலாக ஸ்டாலின் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது, கடைகளில் மோர் வாங்கிக் குடித்தார். இந்தத் தேர்தல் பிரசாரத்தில் சேலம் திமுக எம்.பி. பார்த்திபன் மற்றும் கிழக்குத் தொகுதிப் பொறுப்பாளர் சிவலிங்கம் உடன் இருந்தனர்.





# வாய்ப்பை விடமாட்டேன்

சென்னை, மார்ச் 17

'எனக்கான இந்த வாய்ப்பை விட மாட்டேன்' என, குஷ்பு கூறியுள்ளார்.

தமிழக பா.ஜ., சார்பில், சென்னை, ஆயிரம் விளக்கு தொகுதி வேட்பாளராக, குஷ்பு அறிவிக்கப்பட்டு உள்ளார். இந்நிலையில், அவர், 'டுவிட்டரில்' கூறியுள்ளதாவது:

மக்களுக்கு சேவை செய்வதே, என் நோக்கம். முழுமையான அர்ப்பணிப்பு மற்றும் நேர்மையுடன் செய்வேன் என, உறுதி அளிக்கிறேன். தமி ழக மக்கள், எனக்கு கொடுத்த அன்பு, மரியாதை உள்ளிட்டவற்றை, நான் திருப் பித் தர கிடைத்த, இந்த வாய்ப்பை விடமாட்டேன்-என அவர் கூறியுள்ளார்.

# விசேட சட்டம் இயற்றியாவது 1000 ரூபாவை வழங்குவோம்

## தொழில் அமைச்சர் உறுதி



கொழும்பு, மார்ச் 17

தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் வழங்கிய 1,000 ரூபா சம்பள உயர்வு சலுகை அந்த மக்களுக்கு கிடைப்பதை தாமதப்படுத்தவே சம்பள உயர்வுக்கு எதிராக தோட்டக் கம்பனிகள் நீதிமன்றத்திற்கு சென்றிருப்பதாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஆனால் நீதிமன்றம் நியாயத்தை நிலைநாட்டுமென்று நம்பிக்கை தெரிவித்த அவர், ஏதும் சிக்கல் நிலை ஏற்பட்டால் பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டுவந்தாவது தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

2015 இல் 1,000 ரூபா சம்பள உயர்வு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனால் எமது அரசாங்கமே அதனை நிலைநாட்ட நடவடிக்கை எடுத்தது. இதற்காக 12 சுற்றுப் பேச்சு நடத்தப்பட்டது. தொழிற்சங்கங்களுக்கும் கம்பனிகளுக்குமிடையில் உடன்பாடு எட்ட முடியாமல் போனதால் வர்த்தமானி அறிவிப்பினூடாக 1,000 ரூபா வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

இதற்கு எதிராக தோட்டக் கம்பனிகள் நீதிமன்றம் சென்றுள்ளன. தோட்டங்களின் உரிமை அரசுக்கே இருக்கிறது. குத்தகைக்கே அவை வழங்கப்பட்டுள்ளன. வழக்குத் தாக்கல் செய்து காலங்கடத்துவதே கம்பனிகளின் ?நோக்கமாகும். வழக்கு விசாரணை முடிய பல வருடங்கள் செல்லும். இதற்கு மாற்று வழிகளை அரசு எடுக்கும்." எனவும் அவர் கூறினார்.

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து முழுமையற்ற அறிக்கை!

## கொழும்பு பேராயர் மீண்டும் குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 17

**ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையற்றது என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு தெரிவித்த அவர், இந்த தாக்குதலை யார் ஏற்பாடு செய்தார்கள், ஆதரித்தார்கள் என்பதை ஆணைக்குழுவால் கண்டுபிடிக்க முடியவில்லை எனக் கூறியுள்ளார்.

தேவாலயங்களில் தன் மக்கள் எவ்வாறு துண்டு துண்டாக கிழிக்கப்பட்டார்கள் என்பதைத் தான் கண்டேன் என்றும் அரசியல் நலன்களுக்காக உழைக்கும் தலைவர்களை தாங்கள் விரும்பவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அறிக்கை சிறிய தடயங்களை வழங்கியிருந்தாலும் தாக்குதலுக்குப் பின்னால் இருப்பவர்களை அது அடையாளம் காணவில்லை. எனவே அது 'முழுமையற்ற அறிக்கை' என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் வரை போராட்டத்தைத் தொடருவோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு 25,000 வியாபார நிலையங்கள்

கொழும்பு, மார்ச் 17

சமுர்த்தி பயனாளி குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட இளம் பெண் தொழில் முயற்சியாளர்களுக்காக வீடு மற்றும் வியாபார நிலையத்தை அமைத்துக் கொடுக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் 25,000 இளம்பெண் தொழில் முயற்சியாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

உணவு விநியோக வலையமைப்பை விஸ்தரிக்கும் நோக்கில் அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளிலும் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக பெருந்தெருக்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பெருந்தெருக்கள் அமைச்சினால் முன்வைக்கப்பட்ட பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# அரிசி விலையைக் கட்டுப்படுத்த அமைச்சரவை எடுத்த தீர்மானம்

கொழும்பு, மார்ச் 17

நெல் சந்தைப்படுத்தல் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லை உடனடியாக அரிசியாக மாற்றவும், அதனை சதொச வலையமைப்பின் ஊடாக விநியோகிக்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தை கவனத்தில் கொண்டு தொடர்ந்தும் எடுக்க வேண்டிய மாற்று நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கட்டுப்பாட்டு விலையில் தற்போது சந்தையில் போதுமான அளவு அரிசி இருப்பு இல்லை என்பது குறித்து அமைச்சரவை கவனம் செலுத்தி மேற்கொள்ள வேண்டிய மாற்று நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடிய போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# வவுனியாவில் ஒரு வருடத்தில் 10 காட்டு யானைகள் மரணம்

வவுனியா, மார்ச் 17

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஒரு வருடத்தில் பத்து காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிகின்றன.

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஒரு வருடத்தில் செட்டிகுளத்தில் 4 காட்டு யானைகளும், நெடுங்கேணியில் 3 காட்டு யானைகளும் , வவுனியாவில் 3 காட்டு யானைகளும் உயிரிழந்துள்ளன.

தற்போது வவுனியா மாவட்டத்தில் காடு அழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. இதனால் காட்டு யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைகின்றதுடன் மக்களின் வாழ்வாதாரங்களையும் அழித்தொழிக்கும் நடவடிக்கையையும் மேற்கொள்கின்றது . இதனால் மக்கள் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுடன் வசித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

# மேற்கு முனையத்தில் 51 வீதம் அதானி நிறுவனத்துக்குரியது

கொழும்பு, மார்ச் 17

கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனைய (WCT) ஒப்பந்தத்தில் இந்தியாவின் அதானி நிறுவனம் 51 வீத பங்குகளை கொண்டிருக்குமென்பது தெரிய வந்துள்ளது. அந்த நிறுவனம் நேற்றுமுன்தினம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

அதானி துறைமுகங்கள் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் லிமிடெட் நிறுவனம் இந்தியாவின் மிகப் பெரிய தனியார் துறைமுகங்கள் மற்றும் தளவாட நிறுவனமும், பன்முகப்படுத்தப்பட்ட அதானி குழுமத்தின் முக்கிய துணை நிறுவனமுமாகும்.

இலங்கை துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சிடமிருந்து, ஒப்பந்தம் குறித்த கடிதத்தை பெற்றுள்ளதாகக் கூறியுள்ளது.

இலங்கையின் மிகப்பெரிய பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபை என்பவற்றுடன், மேற்கு முனைய பங்கை அதானி குழுமம் பகிர்ந்து கொள்கிறது.

அரச- தனியார் கூட்டு அபிவிருத்தி திட்ட ஒப்பந்தம் 35 வருடங்களுக்கு செல்லுபடியாகும். மேற்கு கொள்கலன் முனையம், 1400 மீற்றர் நீளம் மற்றும் 20 மீற்றர் ஆழத்துடன், அல்ட்ரா லார்ஜ் கன்டெய்னர் கரியர்களைக் கையாளத்தக்க பிரதான போக்குவரத்து சரக்கு இடமாக மாறும் என அதானி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# மாவட்டங்களுக்கு இடையில் மீண்டும் போக்குவரத்து தடை!

## அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 17

வரும் பண்டிகைகாலத்தை முன்னிட்டு மீண்டும் மாவட்டங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகளை விதிக்குமாறு அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் சமந்தா ஆனந்த தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

பண்டிகை காலங்களில் மற்ற மாவட்டங்களில் இருந்து கொழும்புக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்.

இது மீண்டும் கொழும்பில் பரவும் நோய்த்தொற்றை அதிகரிக்கச் செய்யும்.

இதன்மூலம் பயணக் கட்டுப்பாடுகளை மீண்டும் அமுல்படுத்துவது பெரும் முக்கியத்துவமாகும்-என்றார்.

# புத்தாண்டு காலத்தில் பயணக் கட்டுப்பாடு



கொழும்பு, மார்ச் 17

தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் பொது மக்கள் தமது பயணங்களை மட்டுப்படுத்துமாறு அரசாங்கம் மக்களை கேட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன இந்த கோரிக்கையை விடுத்தார்.

மேலும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு எந்தவொரு கட்டுப்பாடுகளையும் விதிக்க அரசாங்கம் முடிவு செய்யவில்லை என்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரன குறிப்பிட்டார்.

இருப்பினும் கொரோனா தொற்று நிலைமையை கருத்தில் கொண்டு பொதுமக்கள் தொடர்ந்து சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

மக்கள் தொகையில் ஒரு சிறிய பகுதியினர் மட்டுமே தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதை கருத்திற் கொண்டு பயணக் கட்டுப்பாடுகள் குறித்து சிந்திக்குமாறும் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

# நாட்டு மக்கள் கோரிக்கை விடுத்தால் அரசில் இருந்து வெளியேறுவோம்!

## சுதந்திரக் கட்சி எச்சரிக்கை



**கொழும்பு, மார்ச் 17**

**அரசிலிருந்து வெளியேறுமாறு மக்கள் கோரிக்கை விடுப்பார்களாயின் அதனை செய்வதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தயாராகவே இருகின்றது என்று அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் அமைச்சருமான மஹிந்த அமவீர தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, 'கடந்த பொதுத்தேர்தலின்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியை தோற்கடிப்பதற்கு திட்டம் வகுத்தனர். சிலர் கழுகு என்றுகூட எம்மையும் கட்சியையும் விமர்சித்தனர். இனிமேல் கிராம மக்கள் வழங்கும் தீர்ப்பின் - கோரிக்கையின் பிரகாரமே எமது தீர்மானம் அமையும். பதவிகளை துறக்குமாறோ அல்லது வெளியேறுமாறோ மக்கள் கோரிக்கை விடுப்பார்களாயின் அதனை ஏற்று செயற்படுவோம்." - என்றார்.



காணாமல் ஆக்கப்பட்டோருக்காக

# கண்டியை சேர்ந்தவர் யாழில் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

கண்டியைச் சேர்ந்த டீமன் ஆனந்த என்பவரினால் நேற்று பூங்கா முன்றிலில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் இந்த அரசாங்கம் பொறுப்புக் கூறவேண்டும் என வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் அதற்கு ஆதரவாக கண்டியைச் சேர்ந்த டீமன் ஆனந்த என்பவர் யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்கா முன்றிலில் கவனஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்

அவர் கருத்து தெரிவிக்கையில்-

இலங்கையில் குறிப்பாக வடக்கில் பல இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் இந்த அரசாங்கம் உண்மையை வெளிப்படுத்தவேண்டும். கடத்தல்கள் படுகொலைகள் ஈடுபட்டவர்கள் தொடர்பில் என்னிடம் பல ஆதாரங்கள் உள்ளன. அந்த ஆதாரங்களை ஜெனிவாவிலும் சமர்ப்பிக்க உள்ளேன்.

எதிர்கால இளைய சமுதாயத்திற்கு கடந்த காலத்தில் நடந்த சம்பவங்களின் உண்மைத் தன்மை தெரியப்படுத்தப்படவேண்டும். குறிப்பாக தற்போது போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சில காலங்களில் இறந்து விடுவார்கள். ஆனால், எதிர்கால சந்ததியினருக்கு எவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டார்கள் எதற்காக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ற உண்மை தெரியப்படுத்தப்படவேண்டும்.

அத்தோடு தற்போது படுகொலைகள் மற்றும் கடத்தலில் ஈடுபட்டவர்கள் தற்போது பாராளுமன்றத்திலும் மாகாண சபை உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களை கண்டறிந்து அவர்களை கைது செய்ய வேண்டும். அதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறேன்.-என்றார்.

## பொலிஸ் அதிகாரி போல் வேடமிட்ட நபர் கைது

கொழும்பு, மார்ச் 17

உப பொலிஸ்பரிசோதகர் ஒருவரின் சீருடையை அணிந்து பொலிஸ் அதிகாரியை போல போலியாக தன்னை அடையாளப்படுத்திய நபர் ஒருவர் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் சீருடையை அணிந்து பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக பன்னிப்பிட்டிய - பொல்வத்தை பிரதேசத்தில் மேல் மாகாண தெற்கு விசேட குற்ற விசாரணைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் இறக்குவானை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதானவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாத்தறையில் அதிகரிக்கும் தொற்றாளர்கள் எண்ணிக்கை

கொழும்பு, மார்ச் 17

நாட்டில் நேற்றுமுன்தினம் கொவிட்-19 தொற்று உறுதியான 331 பேரில் அதிகமானோர் மாத்தறை மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொவிட்-19 பரவல் தடுப்பு தேசிய செயற்பாட்டு மையம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மாத்தறை மாவட்டத்தில் நேற்று 49 பேருக்கு கொவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளது.

அத்துடன் மாத்தளை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தலா 34 பேருக்கு தொற்று உறுதியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 28 பேருக்கு நேற்று தொற்று உறுதியானது. இதற்கமைய நாட்டில் கொவிட்-19 தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை 88 ஆயிரத்து 238 ஆக அதிகரித்துள்ளது.

# காக்கைதீவு கடற்பரப்பில் மோதல் மீனவர்கள் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ்ப்பாணம் காக்கைதீவுக் கடற்பரப்பில் நாவாந்துறை மீனவர்களுக்கும் ஆனைக்கோட்டை, சாவக்காடு பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களுக்கும் ஏற்பட்ட மோதலின் தொடராக மீனவர்கள் பத்துப் பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

கடந்த சில நாட்களுக்கு முன்னராக நாவாந்துறை மீனவர்களுக்குச் சொந்தமான மீன்பிடி வலைகள் சேதப்படுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இதனையடுத்து இரண்டு தரப்பும் மோதிக்கொண்டதில் பெருமளவான மீன்பிடி உபகரணங்கள் சேதமடைந்துள்ளதுடன் மீனவர்களுக்கும் காயங்களும் ஏற்பட்டுள்ளன.

இதனை அடுத்து தாக்குதல் அச்சம் காரணமாக மீனவர்களில் பலர் மீன்பிடி நடவடிக்கையைத் தவிர்த்திருக்கின்றனர்.

இரண்டு நாட்கள் தொடர்ந்த மோதல் போக்கை அடுத்து நாவாந்துறை, சாவற்காடுப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் உட்பட்ட 10 மீனவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

# வங்கிக்கடன் செலுத்தாத தொழில்முனைவோருக்கு சலுகைக்காலம் வழங்குவது குறித்து பிரதமர் கவனம்!

கொழும்பு, மார்ச் 17

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் மற்றும் கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக வங்கிக் கடன்களை செலுத்தமுடியாத தொழில்முனைவோரின் சொத்துக்களை கையகப்படுத்துவதற்கு பதிலாக சலுகைக் காலம் வழங்குவது குறித்து கவனம் செலுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வங்கிப் பிரதானிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வங்கிக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத தொழில்முனைவோரின் சொத்துக்களை கையகப்படுத்துவதை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது தொடர்பாக நிதி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, தொழில்முனைவோரின் நிதிப் பிரச்னைகளுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் நிதி அமைச்சு, மத்திய வங்கி மற்றும் தொடர்புடைய வங்கிகளுடன் இணைந்து இறுதி முடிவை எட்டுமாறு பிரதமர் அறிவுறுத்தினார்.

இதுபோன்ற பிரச்னைகள் நீண்ட காலமாக இருந்து வருவதாகவும், எந்தவொரு தரப்பும் பாதிக்கப்படாத வகையில் அவற்றைத் தீர்ப்பது முக்கியம் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத எந்தவொரு தரப்பினருக்கும், வங்கி தரப்புக்கும் இடையில் நியாயமான முறையில் பிரச்னைகளைத் தீர்க்க அரசாங்கத்தின் தலையீடு தேவை என்று தெரிவித்த பிரதமர், இது தொடர்பாக சட்டபூர்வ அதிகாரங்களைக் கொண்ட அரசு நிறுவனம் அல்லது அதிகாரியை நியமிப்பது குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

அதன் மூலம் லீசிங் உள்ளிட்ட ஒவ்வொரு துறையிலும் பொருந்தும் கடன் வழங்குநர்களுக்கு நிவாரணம் வழங்க வாய்ப்பு உள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

குறித்த கலந்துரையாடலில் கைத்தொழில்துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ, இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர் டி.எம். ஜே.வி.பி. பெர்னாண்டோ, மக்கள் வங்கித் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, தேசிய சேமிப்பு வங்கித் தலைவர் கேசிலா ஜயவர்த்தன, பிராந்திய அபிவிருத்தி வங்கித் தலைவர் மஹிந்த சாலிய, தேசிய நிறுவன மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர் அனுஷ்கா குணசிங்க மற்றும் மேம்பாட்டு நிதித் துறை பணிப்பாளர் கீதா விமலவீர உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# 30,000 இலங்கையர் நாடு திரும்பினர்1

கொழும்பு, மார்ச் 17

வெளிநாடுகளில் நிர்க்கதியாகியிருந்த சுமார் 30,000 இலங்கைப் பணியாளர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளதாக தொழில்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.வெளிநாடுகளில் நிர்க்கதியான மேலும் 20,000 பேர் நாட்டுக்கு அழைத்துவரப்படவுள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து நாடுதிரும்புவோரை தனிமைப்படுத்துவதற்கான, போதிய இடவசதிகள் இன்மை காரணமாக, அந்த செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டது.

இதனை நிவர்த்தி செய்யும் முகமாக, சகல மாவட்டங்களிலும் தலா ஒவ்வொரு விருந்தகமும், தங்குமிட விடுதியையும் அமைக்குமாறு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.



# வவுனியா செட்டிகுளத்தில் உள்ள புத்தக விற்பனை நிலையத்தில் தீ!

வவுனியா, மார்ச் 17

வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் நேற்றுக் காலை புத்தக விற்பனை நிலையம் ஒன்று தீக்கிரையாகியுள்ளது .

நேற்று காலை செட்டிகுளம் பிரதான வீதியிலுள்ள இந்த விற்பனை நிலையம் திறப்பதற்கு சற்று முன்னரே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக புத்தக விற்பனை நிலையத்தின் உரிமையாளர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார் .

இச்சம்பவத்துக்கு மின் ஒழுக்கே காரணம் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு சென்ற பொதுமக்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் .

நிழல்பிரதி இயந்திரம், குளிர்சானப்பெட்டி மேலும் பல பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசமடைந்துள்ளது . சம்பவ இடத்திற்குச் சென்ற மின்சார சபையினர், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழருக்கு தீர்வு வழங்க முடியுமெனில்

# பஸில் ராஜபக்ஷவையும் ஆதரிக்க நாங்கள் தயார்!

## சுமந்திரன் எம்.பி. சொல்கிறார்



கொழும்பு, மார்ச் 17

**இலங்கையில் 2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பசில் ராஜபக்ஷவால் தமிழர்களின் அரசியல் பிரச்னைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் தேர்தல் விஞ்ஞாபனம் முன்வைக்கப்படுமாக இருந்தால் அவரை ஆதரிக்கத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தை விடவும் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களின் அரசியல் பிரச்னைகள் குறித்த தெளிவான வேலைத்திட்டம் இருந்தது. ஆனால் துரதிஷ்டவசமாக அவர் வெற்றி பெறவில்லை.

பின்னர் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்து நாம் பேச்சுகளை நடத்தியிருந்ததோடு, உங்களால் மட்டுமே தமிழர்களின் அரசியல் பிரச்னைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதை நான் நேரடியாகக் குறிப்பிட்டிருந்தேன்.

ஏனெனில் சிங்கள மக்கள் எதிர்க்காத ஒரே தலைவர் என்ற காரணத்தால் அவர் எடுக்கும் தீர்மானங்கள் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தாது என்ற காரணத்தாலேயே அவ்வாறு தெரிவித்தேன்.

இதை ஜனாதிபதி கோட்டாபய ஏற்றுக்கொண்டபோதும், இன்னமும் தீர்வுகளை வழங்க அவர் முன்வரவில்லை - என்றார்.

(அ)

# இலங்கையிலும் கொரோனா தடுப்பூசியின் பக்கவிளைவு குறித்து ஆராய நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 17

கொரோனா தடுப்பூசியின் பக்கவிளைவுகள் தொடர்பாக ஆராய்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவின் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர், விசேட மருத்துவ நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

பக்கவிளைவுகள் ஏற்பட்டதால், கொவிஷீல்ட் அஸ்ட்ரா செனேகா தடுப்பூசியின் பாவனையை சில உலக நாடுகள் தற்போது தற்காலிகமாக நிறுத்தியுள்ளன.

இலங்கையிலும் கொவிஷீல்ட் தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களில் இதுவரை 30 பேருக்கு குருதி உறைதல் ஏற்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது.

இந்த நிலையிலேயே தடுப்பூசியின் பக்கவிளைவுகள் தொடர்பாக ஆராய்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

எவ்வாறிருப்பினும் இலங்கையில் தடுப்பூசி பாவனையை நிறுத்துவது தொடர்பாக இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என இராஜாங்க அமைச்சர், விசேட மருத்துவ நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

# பௌத்த பிக்கு என்பதால் நான் தலை குனிந்து வர வேண்டுமா?

## மனோ கணேசன் கேள்வி



கொழும்பு, மார்ச் 17

கொழும்பு - கிராண்ட்பாஸ் - கஜீமா தோட்டத்தில் நேற்று முன் தினம் அதிகாலை பரவிய பாரிய தீயினால், பல வீடுகள் எரிந்து சாம்பலாகின.

சம்பவ இடத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் பால சுரேஷ், மஞ்சுளா, அமைப்பாளர் பத்மநாதன் ஆகியோரும் சென்றிருந்த நிலையில் பக்கத்து விகாரையின் தேரர் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக தென்னிலங்கை ஊடகமொன்று “மனோ கணேசனுக்கு மக்கள் எதிர்ப்பு” என செய்தி வெளியிட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது முகநூல் பக்கத்தில் காட்டமான முறையில் பதிவிடல் ஒன்றினை செய்துள்ளார்.

”அதிகாலையில் வட கொழும்பில் தீப்பிடித்த குடிசைகளை பார்க்கப்போன போது, அங்கிருந்த பக்கத்து விகாரையின் பிக்கு என்னோடு வாக்குவாதப்பட்டார்.

அவருடன் நாலு பேர் நின்றார்கள். தேரரும், அந்நபர்களும் ஆளும் மொட்டு கட்சிகாரர்கள். அதுதான் சண்டை.

பௌத்த தேரர் என்றால் எனக்கென்ன?

நமது ஆட்சியில் கட்டப்பட்ட மாடி வீட்டு திட்டத்தில், காலியாக பல வீடுகளை இவர்கள் மக்களுக்கு கொடுக்காமல் வைத்திருக்கிறார்கள். அதை சுட்டிகாட்டியதும் அவர்களுக்கு பொறுக்கலை.

இதை “மனோ கணேசனுக்கு மக்கள் எதிர்ப்பு” என தென்னிலங்கை ஊடகமொன்று செய்தியில் காட்டுகிறார்கள். அதை எடுத்து ஒரு தமிழ் இணையத்தளமும் செய்தி போடுகிறது.

அட போங்கடா..., பௌத்த பிக்கு என்பதால் நான் தலை குனிந்து மூடிக்கொண்டுவர வேண்டுமா? என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நடுத்தர மக்கள் குறித்து அரசு அக்கறை காண்பிக்கவில்லை

## ஹரின் பெர்னாண்டோ குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 17

செல்வந்தர்களுக்கு சார்பாகவே அரசாங்கம் செயற்படுகிறது. நடுத்தர மக்கள் குறித்து அக்கறை காண்பிப்பதாகத் தெரியவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடைந்துள்ளமையை முன்னிட்டு கொழும்பு ஹைட் பார்க்கில் மக்கள் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வின் போது உரையாற்றிய ஹரின்,

நாட்டை பாதுகாப்பதாகக் கூறி ஆட்சியதிகாரத்தை கைப்பற்றிய ஜனாதிபதியிடமிருந்து தற்போது நாட்டைப் பாதுகாக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிய வேண்டிய ஜனாதிபதி ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று, தனது பிரச்னைகளை மக்களிடம் கூறுகின்றார்.

இவை ஜனாதிபதியின் செயற்பாடுகளும் கொள்கைகளும் தோல்வியடைந்திருப்பதையே பிரதிபலிக்கின்றன. ஐக்கிய தேசியக்கட்சி அதன் கொள்கைகளுக்கு முரணாக செயற்பட்டமையினால் நாட்டு மக்கள் அதனைப் புறக்கணித்தார்கள். அதன் விளைவாகவே நாங்கள் ஒன்றிணைந்து ஐக்கிய மக்கள் சக்தியை ஸ்தாபித்தோம்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய தேசிய ரீதியான தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும்.

ஆட்சி மாறினாலும் காட்சி மாறாது என்பார்கள். தற்போதைய அரசாங்கத்தின் தன்மையும் இவ்வாறானதாக காணப்படுகிறது.

இந்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்துக்கொண்டு செயற்படுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்- என்றார்.

# மீன் தொட்டிக்குள் விழுந்து ஒரு வயது குழந்தை மரணம்

கொழும்பு, மார்ச் 17

வீட்டில் வைக்கப்பட்டு இருந்த மீன் தொட்டிக்குள் விழுந்து ஒரு வயது குழந்தை பலியாகி உள்ளது.

கல்கிரியாகம - ககல்ல, ஆடியாகல பகுதியில் உள்ள வீடு ஒன்றிலேயே இந்த சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.35 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கல்கிரியாகம பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கொழும்பு சென்ற தமிழ் இளைஞன் மாயம்!

கொழும்பு, மார்ச் 17

திருகோணமலையிலிருந்து கொழும்புக்குச் சென்ற தமிழர் ஒருவர் திடீரென காணாமல் போயுள்ளார்.

எனினும் இந்த நபரை கொழும்பிலுள்ள பொலிஸார் விசாரித்தமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

கொழும்புக்கு கூலி வேலைக்காக சென்ற நிலையிலேயே இவர் காணாமல் போயுள்ளார். ஈச்சிலம்பற்று - பூநகர் பகுதியைச் சேர்ந்த துரைசிங்கம் சகிந்தன் வயது (29) எனும் இளம் குடும்பஸ்தர் கடந்த 09 ஆம் திகதி சென்ற நிலையில் நான்கு நாட்களாக கொழும்பில் வைத்து காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி தேடி வருகிறார்.

எவ்வாறாயினும் இது தொடர்பாக கொழும்பில் உள்ள பொலிஸாரைத் தொடர்பு கொண்டபோது அவர் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், விசாரணை செய்த பின்னர் அவரை அனுப்பியதாகவும் பொலிஸார் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.

எனினும் தனது கணவர் போகும்போது நன்றாகத்தான் சென்றார் என்றும் அவருக்கு மனநலப் பாதிப்பேதும் இல்லையெனவும் மனைவி தெரிவித்திருக்கின்றார்.

# தமிழக சட்டமன்ற தேர்தல்:
# பெண்களுக்கு அரசியலில் பெயரளவுதான் முக்கியத்துவம்?













அரசியல் தளங்களில் பெண்களின் பங்கேற்புக்கு புறச்சூழல்களில் ஏற்படும் தடைகளைவிட உள்கட்சியில் காட்டப்படும் பாரபட்சமும், இடர்பாடுகளும் தடைக்கற்களாக இருப்பதாக பெண் தலைவர்கள் கூறுகிறார்கள். ஒரு தொகுதியில் தலைவராக ஒரு பெண் வேட்பாளர் தன்னை நிலைநிறுத்திக்கொள்வதற்கான பாதை எளிதானது அல்ல என்கிறார்கள்.

சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க அமைச்சர் நிலோபர் கபீல், தன்னுடைய வாய்ப்பு பறிக்கப்பட்டுவிட்டதாக ஊடகத்தினரிடம் கண்ணீருடன் பேசிய வீடியோ சமூகவலைத்தளங்களில் வைரல் ஆகியது.

கட்சியில் உள்ள மூத்த உறுப்பினர்கள் தனக்கு எதிரான கருத்துக்களை பரவவிட்டு, தன்னுடைய வாய்ப்பை பறித்துவிட்டார்கள் என அழுகையுடன் பேசினார்.

அவர் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கோ அல்லது அவர் வைத்த கோரிக்கைக்கோ இதுவரை கட்சி மேலிடத்தில் இருந்து எந்த பதிலும் அவருக்கு கிடைக்கவில்லை என்கிறார் நிலோபர் கபீல்.

தேர்தல்

'2019 பாராளுமன்றத் தேர்தலில் பாஜகவோடு அ.தி.மு.க. கூட்டணியில் இருந்ததால் என்னுடைய பகுதியில் மக்கள் ஆதரவு தரவில்லை. இருந்தாலும் கட்சிக்காக உழைத்தேன். தற்போது என் மீது வீண் பழிசுமத்தி வாய்ப்பை பறித்துவிட்டார்கள். எனக்கு சீட் தரப்படவில்லை என்பதால் நான் வேறு கட்சிக்கு சென்றுவிடுவேன் என நினைக்கிறார்கள்.

ஆனால் நான் தொடர்ந்து அதிமுகவில் இருப்பேன். இந்த சட்டமன்ற தேர்தலில் கட்சிக்காக பிரச்சாரத்தில் ஈடுபடுவேன்,''என்றார் நிலோபர் கபீல்.

அதேநேரம், அ.தி.மு.க. சார்பாக குறிஞ்சிப்பாடி தொகுதி யில் முன்னதாக பழனிசாமி போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டாலும், முன்னாள் அமைச்சரான செல்வி ராமஜெயத்திற்கு அந்த தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2006ல் புவனகிரி தொகுதியில் வென்றவர் செல்வி ராமஜெயம். அவரை வேட்பாளராக அறிவித்தவுடன், குறிஞ்சிப்பாடி பகுதி அதிமுகவினர் பலர் கட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு, கண்ணாடிகளை சேதப்படுத்தினர்.

### "பாகுபாடு, அச்சுறுத்தலை தாண்டிய பயணம்"

திமுக, காங்கிரஸ் என பயணித்து தற்போது பாஜகவில் சேர்ந்துள்ள நடிகை குஷ்பு தனது பத்தாண்டு அரசியல் வாழக்கையில் பலமுறை பாகுபாட்டை சந்தித்துள்ளதாகக் கூறுகிறார். ஆயிரம் விளக்கு தொகுதியில் திமுக வேட்பாளர் மருத்துவர் எழிலனை எதிர்த்து போட்டியிடும் குஷ்பு சவால்களை சந்தித்து வெற்றி காண்பது தனக்கு பிடித்தமான ஒன்று என்கிறார்.

''பெண் தலைவர்கள் தலையெடுக்கிறார்கள் என்பது ஆண்களுக்கு ஒருவித பாதுகாப்பற்ற தன்மையை ஏற்படுத்துகிறது. தி.மு.க. மற்றும் காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளி லும் பாகுபாடு, அச்சுறுத்தல் ஆகியவற்றை நான் சந்தித்திருக்கிறேன்.

என்னை பற்றிய செய்திகள் வெளியாவதை அவர்கள் அதிகம் விரும்பியதில்லை. பத்திரிகைகளில் என் புகைப் படம்வருவது, என்னை சந்திக்க தொண்டர்கள் வருவது அல்லது பொது இடங்களில் எனக்காக மக்கள் கூடுவது ஆகியவற்றை பல நேரங்களில் ஆண் உறுப்பினர்கள் விரும்பியதில்லை,''என்கிறார். அரசியல் கட்சிகளிலும் வேட்பாளர்களை தேர்வு செய்விதிலும், பெண்களுக்கு இடஒதுக்கீடு அளிப்பது பிரச்னையை தீர்க்குமா என கேட்டோம்."இடஒதுக்கீடு தீர்வாகாது.

ஆண்களின் மனம் மாறவேண்டும். பெண்களை சமத்துவமாகப் பார்க்கும் தெளிவை அவர்கள் அடைய வேண்டும். அதற்காக 33 சதவீதம் இடஒதுக்கீடு கேட்பதைவிட, எல்லா கட்சிகளும் பெண்களுக்கு சரிபாதி தொகுதிகளை அளிக்க முன்வரவேண்டும். சரிசமமான ஒதுக்கீடு என்பது பலன் தரும்,"என்கிறார் குஷ்பு.

பிரமிளா கிருஷ்ணன்

### "ஆண்களைவிட அரசியலுக்கு பெண்கள் ஏற்றவர்கள்"

காங்கிரஸ் கட்சியில் இரண்டு முறை வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் விஜயதரணிக்கு வாய்ப்பு அளிக்கப்படுவதை எதிர்த்து காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் கடந்த வாரம் போராட்டம் நடை பெற்றது. விளவங்கோடு தொகுதிக்கான வேட்பாளர் அறிவிப்பை காங்கிரஸ் கட்சி நிறுத்திவைத்துள்ளது.

இது குறித்து விஜயதரணியிடம் பேசியபோது-

''எனக்கு முதல்முறை 2006 இல் கட்சி வாய்ப்பு கொடுத்த போது, கம்யூனிஸ்ட் கட்சியின் தொகுதியாக இருந்த விளவங்கோட்டை காங்கிரஸ் கட்சியின் பலமான தொகுதியாக மாற்றிக் காட்டினேன். 2011ல் மீண்டும் வாய்ப்பு வந்தது. 2006ஐ காட்டிலும் 10,000 வாக்குகள் அதிகம் பெற்று மீண்டும் என் திறமையை நிரூபித்தேன். என்னுடைய தொகுதியில் உள்ள மக்கள் நான் செய்த பணிகளுக்காக எனக்கு ஆதரவு தர காத்திருக்கிறார்கள். வெறும் 10 பேர் சேர்ந்து கட்சி தலைமையகத்தில் போராட்டம் நடத்துவதால் எனக்கு வாய்ப்பு கொடுப்பதை ஏன் நிறுத்திவைக்கவேண்டும்.

மக்களிடம் செல்வாக்கு மிகுந்த தலைவராக நான் உருவாகியிருக்கிறேன்,"என்கிறார் விஜயதரணி.தனது தொகுதியில் மூடும் நிலையில் இருந்த மத்திய அரசின் ஆலை ஒன்றில் ஏற்பட்ட வேலைவாய்ப்பு பிரச்னைகளுக்காக உச்சநீதிமன்றம்வரை சென்று வழக்கறிஞராக தானே வாதாடி நியாயம் பெற்று வாக்காளர்களை கவர்ந்ததாக கூறுகிறார்.

"என் தொகுதி மக்களின் பிரச்னைகளை என் வீட்டு பிரச்னையாக பார்த்து, உடனே தீர்வு காண்பதால் மக்களுக்கு என் மீது நம்பிக்கை உள்ளது. கட்சியில் உள்ளவர்கள் சிலர் பூசல் ஏற்படுத்துகிறார்கள். பெண்களுக்கு போராட்ட குணம் அதிகம். அரசியலுக்கு தேவையான தகுதிகள் ஆண்களைவிட பெண் களுக்குத்தான் அதிகம் உள் ளது. அதை பெண்கள்தான் தடைகளை தாண்டி நிரூபிக்கவேண்டும். ஆண்களிடம் மனமாற்றம் ஏற்படவேண்டும்,"என்கிறார் விஜயதரணி.

''பாலின பேதம் எங்கள் கட்சியில் இல்லை"அடுத்ததாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திருப்பரங்குன்றம் தொகுதியில் போட்டியிடும் பொன்னுத்தாயிடம் பேசியபோது-.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினரான இவர் முதல்முறையாக அரசியல் களம் காண்கிறார். பிற அரசியல் கட்சிகளைப் போல் இல்லாமல், கட்சியில் மூத்த உறுப்பினர் மற்றும் கட்சியில் செய்த வேலைகளை வைத்ததுமட்டுமே தனக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார் பொன்னுத்தாய்.

''பல கட்சிகளில் வேட்பாளர் நேர்முகத்தேர்வில் தொகுதியில் தேர்தலுக்கு எவ்வளவு செலவு செய்வீர்கள் என்றுதான் முதலில் கேட்பார்கள். எங்கள் கட்சியில், நாங்கள் மக்களுக்காக என்ன வேலை செய்தோம், எத்தனை சமூகநீதி போராட்டங்களில் வெற்றி பெற்றோம் என்பதுதான் முதல் கேள்வியாக இருக்கும்.

அதோடு, பிற கட்சிகளில் உள்ள பெண்களுக்கு குடும்பத்தின் பணபலம் பெரிதும் தேவை. எங்கள் கட்சியில் அப்படி இல்லை. கட்சியின் விதிமுறைகளுக்கு உட்பட்டுதான் தேர்தல் செலவு இருக்கும். எங்கள் கட்சியில் பாலின பேதம் கிடையாது. பிற கட்சிகளில் அவதிப்படும் பல சகோதாரிகளை சந்தித்திருக்கிறேன்,"என்கிறார் பொன்னுத்தாய்.

### "பெண் தலைவர்களுக்கு அங்கீகாரம் கிடைப்பது சவாலானது"

தலைவர்களாக உயர்ந்துவிட்ட பெண்களுக்கு சிக்கல் கிடையாது என்றும் அடிமட்டத்தில் கட்சி பணியாற்றும் பெண்களுக்கு சவால்கள் அதிகம் என்றும் கூறுகிறார் தி.மு.கவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன்.

''பெண் பிரதிநிகளுக்கு அரசியல் கட்சிகளில் அங்கீகாரம் கிடைப்பது சவாலானதுதான். ஜெயலலிதா, இந்திரா காந்தி, சோனியா காந்தி போன்றவர்கள் பயணித்த பாதை வேறு. சாதாரண அடிமட்ட தொண் டராக கட்சியில் பணியாற்றும் பெண் களின் நிலை வேறு.

முந்தைய காலங்களைப் போல பெண்கள் அரசியல் கட்சியில் சேர்ந்தால் அவர்களை மோசமாக பார்க்கும் பார்வை தற்போது இல்லை. ஆனால் கட்சி வேலைகளை செய்யும்போது, பெண் தலைவர்களுக்கு சிக்கல்கள் உள்ளன.

குடும்பத்தின் ஆதரவு கட்டாயம் தேவை. குடும்ப உறுப்பினர்கள் தேர்தலுக்கு பெண் உறுப்பினர் செலவு செய்வதை ஏற்கவேண்டும். அதேநேரம், தனது திறமையை பெண்கள் நிலைநிறுத்திவிட்டால், அவர்களுக்கு தொகுதியில் நல்ல அங்கீகாரம் இருக்கிறது என்று தெரியவந்தால், எந்த கட்சியாக இருந்தாலும், அந்த பெண்ணுக்கு வாய்ப்பளிக்கத் தவற மாட்டார்கள்,"என்கிறார் கீதா ஜீவன்.

### சமூக மாற்றம் தேவை

அரசியல் தளத்தில் பெண்களின் பங்கேற்பை அதிகரிக்கவேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருபவர் சமூக செயற்பாட்டாளர் ஷீலு. பெண் பஞ்சாயத்து தலைவர்களின் ஆளுமை பணப்பை அதிகரிக்க பயிற்சி வகுப்புகளை நடத்தியவர். பெண் ஒருவர் தலைவராக மதிக்கப்படுவது அவ் வளவு எளிதல்ல என்கிறார் ஷீலு.

"பெண் தலைவர்களுக்கு வாழ்க என கோஷமிடுவதைக் கூட மிகவும் தயங்கிதான் சொல்வார்கள். பெண்ணை ஒரு தொகுதியில் தலைவராக ஏற்கிறார்கள் என்றால், ஒரு வேளை அந்த கட்சியில் அவரது கணவரோ, தந்தையோ செல்வாக்கான நபராக இருப்பார்.

எந்த குடும்ப பின்னணியும் இல்லாமல் பெண்கள் தலைவராவது, தேர்தலில் போட்டியிட வாய்ப்பைப் பெறுவது என்பது மிகவும் அரிதான நிகழ்வு,"என்கிறார் ஷீலு.

பெண்களுக்கு பொறுப்புகள் கொடுப்பதை கட்சிகள் ஊக்குவிப்பதோடு, ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் மாற்றம் தொடங்கவேண்டும் என்கிறார் ஷீலு. ஆணாதிக்க சிந்தனைகள் ஒழிந்து, சமத்துவம் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டால்தான் அந்த மாற்றம் சாத்தியம் என்கிறார் அவர்.

**- நன்றி: பி.பி.ஸி.**

# ஜெனீவாவில் இலங்கையின் நீதிக்கான நம்பிக்கைகள் மறைந்து போகின்றன

**முஜிப் மஷால்**

காணாமல் போனவர்களின் குடும்பங்கள் சிறிய வீதியோரங்களில் அமர்ந்திருக்கின்றன. அவர்கள் இலங்கையின் அழிவடைந்த வடக்கின் கிராமங்களில் தகவல்கள் அல்லது கருத்துக்களை திரட்டுகின்றனர். அவர்கள் நாட்டின் கொடூரமான உள்நாட்டுப் போரின் போது காணாமல் போன பல்லாயிரக் கணக்கானோரின் புகைப்படங்களை அணைத்துக்கொள்கின்றனர். ஒவ்வொரு இடத்திலும், பெற்றோர்களும் தாத்தா பாட்டிகளும் அதிகாரிகளிடம் ஒரு கேள்வியை மட்டுமே கேட்கிறார்கள்: எங்கள் பிள்ளைகள் எங்கே?

நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக ஆர்ப்பாட்டங்கள் தடையின்றி தொடர்கின்றன.

போரின் மனித இழப்புகளின் எண்ணிக்கையை கணக்கிடுவதற்கு அரசாங்கத்தால் அனுமதிக்கப்படுகிறது. ஏற்கனவே விரக்தியுற்றிருந்த நிலையில் இப்போது ஆர்ப்பாட்டங்கள் நம்பிக்கையற்றவகையாகத் தெரிகிறது. இலங்கையில் ஒரு புதிய அரசாங்கம் உள்ளது. அது நினைவுகூர்வதைக் கூட எதிர்ப்பின் செயலாக மாற்றிவிட்டது. கோட்டாபய ராஜபக்ஷ 2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஜனாதிபதியாக பொறுப்பேற்றதிலிருந்து, அதிகாரிகள் செய்தி ஊடகங்களை சோதனை செய்தனர், ஊடகவியலாளர்கள் மற்றும் ஆர்வலர்களை துன்புறுத்தி விசாரித்தனர்.

மனித உரிமை வழக்கறிஞர்களையும் எழுத்தாளர்களையும் சிறைக்கு இழுத்துச் சென்று பல மாதங்கள் குற்றச்சாட்டுக்களின்றி தடுத்து வைத்தனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற உரிமைகளுக்கான கண்காணிப்பு அமைப்புகள் கூறுகின்றன.

போர்க்கால துஷ்பிரயோகங்களைப் ஆராயும் விசாரணையாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். நாட்டை விட்டு வெளியேற நிர்பந்திக்கப்படுகிறார்கள். அல்லது பயணத் தடைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். கடந்த கால குற்றங்களுக்கான பொறுப்புணர்வை அரசாங்கம் ஒரு அவமதிப்பு என்று கருதுகிறது.

அது தற்செயல் நிகழ்வு அல்ல. இலங்கையின் புதிய அரசாங்கம் 2009 ல் மூன்று தசாப்த கால யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்த அதே ஆட்களால் வழிநடத்தப்படுகிறது. பின்னர் அரை தசாப்தத்திற்குப் பிறகு அதைப் பற்றிய விவாதத்தைத் தூண்டியது.

"எங்களுக்கு இனிமேல் நம்பிக்கை இல்லை" என்று பலவந்தமாக காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கான சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா கூறினார். 2009 ஆம் ஆண்டில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட பின்னர் அவரது 34 வயது மகன் காணாமல் போயிருந்தார். அதனால் தான் இந்த பிரச்சினையில் எங்களுக்கு சர்வதேச தலையீடு தேவை என்று நாங்கள் நினைக்கிறோம். என்று அவர் கூறியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை கூடும் போது இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை மோசமடைவது நிகழ்ச்சி நிரலில் முன்னிலைப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

போரின் போது அனைத்து தரப்பினரும் இழைத்த போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணையுடன் ஒத்துழைக்க இலங்கை சமீபத்தில் கைவிடப்பட்ட உறுதிப்பாட்டிற்கு மீண்டும் திரும்ப வேண்டும் என்று அரசாங்கத்தின் விமர்சகர்கள் விரும்புகிறார்கள். அத்துடன் பௌத்த சிங்கள இன பெரும்பான்மையினரால் ஆதிக்கம் செலுத்தும் அரசாங்கத்தின் கடும் போக்கை கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

ராஜபக்ஷ அரசாங்கம் வடக்கில் பெரும்பான்மையான இந்து தமிழர்கள் உட்பட இன மற்றும் மத சிறுபான்மையினரை அந்நியப்படுத்துவதாகவும் பாகுபாடு காட்டுவதாகவும் மனித உரிமைகள் குழுக்கள் குற்றம் சாட்டியுள்ளன. இத்தகைய கொள்கைகள் உள்நாட்டுப் போரை முதன் முதலில் ஊக்குவித்த அதே பதட்டங்களைத் தூண்டுகின்றன. தமிழ் கிளர்ச்சியாளர்கள் ஒடுக்குமுறைக்கு எதிராக பிரிந்து சென்று ஒரு அரசை நிறுவ முயற்சிப்பதன் மூலம் பதிலளிக்க முயன்றனர்.

மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் மிசேல் பச்லெட்டின் கண்டுபிடிப்புகளை ஐ.நா மனித உரிமைகள் பேரவை பரிசீலிக்கும். அவர் பெப்ரவரி 9 மதிப்பீட்டில் நாட்டின் செல் திசையைப் பற்றி ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியிவ்ருந்தார். மேலும் இந்த விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பும் வாய்ப்பையும் வெளிப்படுத்தியிருந்தார்.

"கடந்த ஆண்டின் முன்னேற்றங்கள் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கான சூழலை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஜனநாயக பரிசீலனைகள் மற்றும் சமப்படுத்தல்கள் மற்றும் குடிமைக்கான வெளி போன்றவை படிப்படியாக அழிந்துவிட்டன. மேலும் அபாயகரமான முறையில் விலக்கி வைத்தல் மற்றும் பெரும்பான்மை பற்றிய பேச்சு மீண்டும் உருவாக இடமளித்தது" என்று பச்லெட் அறிக்கையில் எழுதியுள்ளார்.

மனித உரிமைகள் பேரவையில் கருத்துத் தெரிவித்தபோது, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, "இலங்கைக்கு எதிராக செயற் படும் சக்திகளின்" வேலையென குறிப்பிட்டதுடன், நாட்டின் இறைமையைஐ. நா. வின் அறிக்கை மீறுவதாகவும் அறிவித்தார். அத்துடன் அறிக்கையின் அடிப்படையில் இலங்கைக்கு எதிராக தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டாம் என்றும் குணவர்த்தன உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார். ஏனெனில் இது "பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளிடையே மன உறுதியை இழக்கச் செய்துவிடும்."

பேரவை அளவுகோல்களை வைத்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஒரு குறுகிய காலத்திற்கு, இலங்கை, மியான்மருடன் சேர்ந்து, மோதலின் நிழல்களிலிருந்து ஒரு ஜனநாயகமாக மலர்ந்து வருவதற்கான வெற்றிக் கதையை கொண்டதாக பார்க்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டில், சாத்தியமில்லாத அரசியல் கூட்டணியொன்று, 2009ல் தமிழ் கிளர்ச்சியை நசுக்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்தது.

போர்க்கால துஷ்பிரயோகங்களுக்கான பொறுப்புக்கூறலுக்கு உறுதியளித்த புதிய அரசாங்கம், போர்க்கால குறைகளை நிவர்த்தி செய்யத் தொடங்கியதுடன் சிவில் சமூகம் தோன்றுவதற்கான வெளியையும் ஏற்படுத்தியது. பேரழிவுகரமான போரின் சில காயங்களை குணப்படுத்தும் பாதையில் நாட்டை நிறுத்தியது. போரின் போது காணாமல் போனவர்களின் குடும்பங்கள் என்ன நடந்தது என்று கணக்கிடுவதற்கு ஆரம்பித்தன.

ஆனால் அடுத்த நான்கு ஆண்டுகளும் கூட்டணிக்குள் எற்பட்ட குழப்பமான மோதல்காலை கொண்டதாக அமைந்தது. இது அரசாங்கத்தை முடக்கியது. 2019 ஆம் ஆண்டில் உயிர்த்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற பெரிய பயங்கரவாத தாக்குதலில் 250 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். குண்டுவெடிப்பிற்கு அனுமதித்த பாதுகாப்பு குறைபாட்டிற்கு அந்த முரண்பாடு பங்களித்தது.

அச்சத்தின் அந்த தருணத்தில், கோத்தாபய ராஜபக்ஷ தன்னை நாட்டுக்குத் தேவையான பலமானவராகக் வெளிப்படுத்தியிருந்தார். அந்த ஆண்டின் பிற்பகுதியில் அவர் தேர்தலில் வெற்றி பெற்றார். அவரது சகோதரரும், முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த பிரதமரானார். மேலெழுந்து வந்த சிவில்வெளி "இப்போது போய்விட்டது" என்று அம்பிகா சற்குணநாதன் கூறினார், சமீபத்தில் மியான்மர் முழு அளவிலான இராணுவ சர்வாதிகாரத்திற்கு திரும்புவது ஒரு எச்சரிக்கை என்று அவர் குறிப்பிட்டார்.

"சில நேரங்களில் சிறுவிடயங்களில் திருப்தி அடைவதும், அவர்கள் இணக்கப்பாடுகளை நிறைவேற்றாதபோது அரசாங்கத்தை முக்கிய கவனத்திற்கு கொண்டு வராததும்பாடமாக இருக்கிறது. அது செயற்படாது" என்று அவர் கூறி யுள்ளார்.

முன்னாள் இராணுவ அதிகாரிகளை தனது அரசாங்கத்தில் கொண்டிருந்த கோட்டதபய ராஜபக்ஷ கடந்த கால குற்றங்கள் தொடர்பான விசாரணை முயற்சிகளை பாதுகாப்பு அதிகாரிகளின் மீதான "அரசியல் பழிவாங்கல்" என்று குறிப்பிட்டதாக மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுக்கள் தெரிவிக்கின்றன. நாட்டின் சிங்களவர்களுக்கு சாதகமான ஆனால் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான கொள்கைகளை உள்வாங்கப்பட்டதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர். முஸ்லிம்களின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் கோவிட்-19இல் இறந்தவர்களை கட்டாயமாக தகனம் செய்வது, இது அவர்களின் நம்பிக்கையை மதிக்கவில்லை என்றும், கடும் விமர்சனங் கள் மேலெழுந்திருந்தன. மருத்துவ நிபுணர் களிடமிருந்தும், உலக சுகாதார அமைப்பி னரிடமிருந்தும் உத்தரவாதம் அளிக்கப் பட்ட போதிலும், அடக்கம்செய்வது ஒரு சுகாதார ரீதியான ஆபத்தை ஏற்படுத்து கிறது என்று கூறி அரசாங்கம் இந்த நடை முறையை தொடர்ந்தது.

கோவிட் -19 நோயால் 20 நாள் மகன் ஒரு மருத்துவமனையில் இறந்திருந்த நிலையில் எம்.எஸ்.எம் ஃபாஹிம் என்பவர் ஆட்சேபனை தெரிவித்தபோதும் அரசாங்கம் தகனம் செய்தது என்று அவர் கூறியுள்ளார்.

"நான் ஒரு மகனுக்காக ஆறு ஆண்டுகள் காத்திருந்தேன்" என்று பாஹிம் கூறினார். "அவர் இறந்தபோது, நான் மிகவும் கவலையுடன் இருந்தேன், அவர் தகனம் செய்யப்பட்டபோது, அது எனக்கு விடயங்களை மோசமாக்கியது. என் மகனிடம் முறையாக விடைபெறக்கூட என்னால் முடியவில்லை" என்று அவர் மேலும் கூறியுள்ளார். ஆனால், இப்போது அடக்கத்துக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் செல் திசைக்கான அச்சதின் பெரும்பகுதியானது பேச்சு சுதந்திரம் மற்றும் கடந்த கால அட்டூழியங்களை நினைவு கூருவது குறித்து சகிப்புணர்வின்மை என்பனவற்றிலிருந்து உருவாகிறது. காணாமல் போனவர்களுக்கான தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களையும், நீதிக்கான அழைப்புகளையும் கொடூரமான பயங்கரவாத செயல்களில் ஈடுபடும் ஒரு கிளர்ச்சியைத் தோற்கடித்த ஒரு இராணுவத்திற்கான அவமரியாதை என்று கோட்டாபய ராஜபக்ஷ வர்ணிக்கிறார்.

**- நியூயார்க் டைம்ஸ்**



# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**


**17**

**கேள்விகள் பயிற்சி செய்வதற்கு**

**01D. குறித்த உரு தொடர்பாக தரப்பட்ட விவரணம்**


**2014 (07)**

(07) வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.




**2015 (06)**


(06) தரப்பட்டுள்ள உருவில் ? குறியினால் காட்டப்படும் நிரலில் இருக்க வேண்டிய குறியிட்டுக் கூட்டம் யாது?




**2018 (03),(04), 22, 23**


♦ 03, 04 ஆகிய வினாக்களில் காட்டப்பட்டுள்ள விலங்குகளும் உபகரணங்களும் ஒரு குறித்த இயல்புக்கேற்ப இரு கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடை யாது?

03.





(1) AB உம் CD உம் (2) AC உம் BD உம் (3) AD உம் BC உம்

04.





(1) A,D,E உம் B,C,F உம் (2) A,D,F உம் B,C,E உம் (3) B,D உம் A,C,E உம்

22. வெறுமையாயுள்ள அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.




23. வெறுமையாயுள்ள அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.




**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# ஒருமித்த இலங்கைக்குள் தமிழருக்கு நீதி அவசியம்

*சஜித் பிரேமதாஸ வலியுறுத்து*



கொழும்பு,மார்ச்17

**ஒருமித்த இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு நீதியை உறுதி செய்வது அவசியம் என எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.**

ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியடைந்துள்ளமையை முன்னிட்டு நேற்று முன்தினம் கொழும்பு ஹைட்பார்க்கில் இடம்பெற்ற கூட்டத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் போரால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

போரால் ஒட்டுமொத்த நாட்டு மக்களும் பாதிக்கப்பட்டிருந்தாலும்கூட வடக்கு - கிழக்கு மக்களே அதனால் அதிகளவில் பாதிப்படைந்தனர்.

எனவே, ஒருமித்த இலங்கைக்குள் அவர்களுக்கான நீதியை உறுதிசெய்வது அவசியமாகும். இதன்மூலம் தேசிய பாதுகாப்பும், நாட்டின் சுயாதீனத்தன்மையும் உறுதிப்படுத்தப்படும்.

அதேபோன்று, தோட்டத்தொழிலாளர்களையும் சிறுதோட்ட உரிமையாளர்களாக்கக் கூடியவகையிலான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

சிறுபான்மையின மக்களுக்கு எவ்வித பாதிப்பும்ஏற்படாத வகையில்அனைவரும் ஒன்றிணைந்து வாழக்கூடிய நாடொன்றைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும் என்றும் குறிப்பிட்டார். (எ)

## 15.9 பில்லியன் ரூபா நட்டம்:

# சீனி இறக்குமதி மோசடி குறித்து விஷேட விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, மார்ச்.17

சீனி இறக்குமதி மோசடி தொடர்பில் விஷேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி தொடர்பான ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, விசாரணைகளுக்காக குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது என அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனிடையே, இந்த விடயம் தொடர்பில் விஷேட கணக்காய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவொன்றை ஈடுபடுத்தியுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார். சீனி இறக்குமதியின் போது 15.9 பில் லியன் ரூபாய் வரி மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியினரும் சீனி இறக்குமதியின் போது வரி மோசடி செய்யப்பட்டுள்ளதாக தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். (எ)

# மன்னாரில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்த வயோதிபர் உயிரிழப்பு!

மன்னார், மார்ச்.17

மன்னாரில்கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம்காணப்பட்டு சிகிச்சை பெற்று குணமடைந்த வயோதிபர் ஒருவர், மீண்டும் சுகயீனம் காரணமாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார் என அந்த மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னாரில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அலுவலகத்தில் பணியாற்றிய 86 வயது வயோதிபர் ஒருவரே, நேற்று முன்தினம் திங்கள்கிழமை மதியம் இவ்வாறு உயிரிழந்தார்.

இந்த வயோதிபருக்கு ஏற்கனவே கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்ட நிலையில் இந்த வயோதிபர்தனிமைப் படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு குணமடைந்த நிலையில் மீண்டும் வீடு திரும்பியுள்ளார்.

மீண்டும் அவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்ட நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, கடந்த சில தினங்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் மதியம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (எ)



## போலி நாணயத்தாள்களுடன் நிந்தவூரில் மூவர் சிக்கினர்!

நிந்தவூர், மார்ச்.17

நிந்தவூரில் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமான போலி நாணயத் தாள்களுடன் மூவர் கைதுசெய்யப்பட்ட னர்.

வாழைச்சேனை இராணுவப் புலனாய் வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தக வல் ஒன்றிற்கமைய அக்கரைப்பற்று பொலிஸார் இந்த மூவரையும் கைது செய்தனர். இவ்வாறு கைதானவர்கள் நிந்தவூர் பகுதியிலுள்ள வீடொன்றில் தங்கியி ருந்து இவ்வாறான சட்டவிரோத செய லில் ஈடுபட்டுள்ளனர்.

கைதாகிய குறித்த சந்தேக நபர்கள் தங்கிய வீட்டிலிருந்து பிறின்டர் மற்றும் கணனி உள்ளிட்ட 5000 ரூபாய் அச்சிடும் தாள்கள், அச்சிடப்பட்ட நாணயத்தாள் கள் என்பன மீட்கப்பட்டன.

ஒலுவில், பாலமுனை, கல்முனை ஆகிய பகுதியைச் சேர்ந்த நபர்களே இவ் வாறு கைதானவர்களாவர். இவ்வாறு கைதான நபர்களை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

இதில் கைதான சந்தேக நபர் ஒருவர் கடந்த 6 மாதங்களுக்கு முன்னரும் போலி நாணயத்தாள்களை அச்சடித்து விநியோ கித்த குற்றச்சாட்டில் கைதாகி விடுதலை யானவர் என விசாரணையில் தெரியவந் துள்ளது. (எ)

# “2024 ஆம் ஆண்டு ஆட்சியை கைப்பற்றுவது ராஜபக்ஷக்களுக்கு வெறும் பகல்கனவே!”

### மஹிந்தவுக்கு ஏற்பட்ட கதியே கோட்டாவுக்கும் ஏற்படும் என்கிறார் ராஜித



கொழும்பு, மார்ச்.17

**2024 ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவது என்பது ராஜபக்ஷக்களுக்கு வெறுமனே பகல் கனவாகவே அமையும்.**

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு 2014 ஆம் ஆண்டு ஏற்பட்ட கதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 2024ஆம் ஆண்டு ஏற்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப் பட்டு ஒருவருடம் பூர்த்தியடைந்துள்ள மையை முன்னிட்டு நேற்று முன்தினம் கொழும்பு ஹைட்பார்க்கில் மக்கள் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது.

இதில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போதைய பலவீனமான அரசாங் கத்தை வீழ்த்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைய வேண்டியது அவசியமா கும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருடம் பூர்த்தியடைந்துள்ள நிலையில் நாட்டு மக்களுக்கு எவ்வித நலன்களும் கிடைக் கப்பெறவில்லை.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைத்த நல்லாட்சி அரசாங்கத்தின் உறுப்பினர்கள் தேசத் துரோகிகளாகவும், அத்தியாவசிய பொருள்களின் விலைகளை ராஜபக்ஷ குடும்பத்தின் உறவினர்களுக்கு மாத்திரம் குறைக்கும் அரசாங்கத்தின் உறுப்பினர் கள் தேசப்பற்றாளர்களாகவும் சித்திரிக் கப்படுகின்றனர்.

அதுமாத்திரமன்றி நாட்டின் பொரு ளாதாரம் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது.

இவ்வருட இறுதியில் அத்தியாவ சியப் பொருள்களின் விலைகள் பெரு மளவில் அதிகரிக்கும். எதிர்வரும் சித்திரைப்புத்தாண்டின் போது நாட்டு மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்கும் நிலையே தோற்றம் பெறும்.

நாட்டுமக்களுக்கு மாத்திரமன்றி, வெளிநாடுகளில் வாழும் இலங்கையர் களுக்கும் இந்த அரசாங்கம் துரோக மிழைத்துள்ளது.

பல்வேறு வழிமுறை ஊடாக அரச நிதி மோசடி செய்யப்படுகின்றது. முஸ் லிம் வியாபாரிகள் ஊடாக நிதி மோசடிகளில் ஈடுபடும்போது மாத்திரம் அரசாங்கம் பௌத்த தேசியவாதம் தொடர்பில் பேசுவதில்லை.

ஆனால், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் போது மாத்திரம் அரசாங்கம் அதனை விரும்பவில்லை. அதுமாத்திரமன்றி ஜனாதிபதி இனவாதத்தை முன்னிறுத் தியே அரச நிர்வாகத்தை முன்னெடுத்து செல்கிறார்.

நாட்டுமக்கள் அனைவரையும் இணைத்துக்கொண்டு, அரசாங்கத்துக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக் கப்படும் குற்றச்சாட்டுக்களை ராஜபக் ஷக்கள் தமது அதிகாரத்தைப் பிரயோ கித்து முடக்குகிறார்கள். எனினும் நாம் இதற்கு ஒருபோதும் அடிபணியமாட் டோம்- என்றார். (எ)

# நீதியை பெற்றுக்கொடுப்பதில் கூட்டமைப்பு நயவஞ்சகம்

### முன்னணி குற்றச்சாட்டு!

அம்பாறை, மார்ச்.17

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நய வஞ்சகப் போக்கினை கடைப் பிடித்துள்ளார் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங் கம் சுரேஷ் குற்றம்சாட்டி யுள்ளார்.

அம்பாறை பாண்டிருப்பு பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குற்றம்சாட்டி னார்.

ஜெனிவா கூட்டத்தொடரில் சில நாடுகளால் வரைபு ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கில் 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் தெரிவாகினர். அந்த வகை யில் இவர்கள் சொல்வதைத் தான் உலகம் ஏற்கும். தற்போது அந்த வரைபிற்கு தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலை வரும் உடன்பட்டுள்ளார். இதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் ஒரு



பச்சதுரோகத்தையும் நயவஞ் சகத்தையும் கூட்டமைப்பின் தலைவர் செய்துள்ளார்.

தமிழ் மக்களாகிய நாங்கள் இனிமேலும் விழிக்காதுவிட் டால் எங்கள் தமிழ் மக்களை காப்பாற்றுவது கேள்விக்குறி யாவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் கொழும்பில் இருவர் கைது

கொழும்பு, மார்ச்.17

கொழும்பு, டாம் வீதிப் பகுதியில் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியக அதி காரிகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது ஒரு கிலோ கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

அத்துடன் இதன் போது 29 மற்றும் 37 வயது இரு சந்தே கநபர் களையும் அதிகாரிகள் கைதுசெய்தனர்.

இவ்வாறு கைது செய் யப்பட்ட இரு வரும் கொழும்பு 02, 12 ஐ சேர்ந்தவர்கள்.

சந்தையில் ஹெரோ யின் போதைப்பொரு ளின் பற்றாக் குறை காரணமாகவே ஐஸ் போதைப்பொருளின் கடத்தல் நடவடிக்கைகள் அதிகரித் துள்ளன என்றும் எவ்வாறா யினும் இது போன்ற கடத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் தொடர்ந்தும் சுற்றிவளைப் புக்கள் முன்னெடுக்கப்படும் என்றும் பொலிஸார் கூறினர். (எ)

## 7 இலட்சத்து 84 ஆயிரம் இலங்கையருக்கு தடுப்பூசி

கொழும்பு, மார்ச்.17

இலங்கையில் இதுவரை 7 இலட்சத்து 84 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஒக்ஸ்போர்ட்- அஸ்ட்ராசெனேகா தடுப்பூசியை செலுத்திக் கொண்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன் தினம் திங்கள்கிழமை மட்டும் 11 ஆயிரத்து 489 பேர் தடுப் பூசியைப் பெற்றுக்கொண்டனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அண்மையில் கொவாக்ஸ் திட்டத்தின் கீழ் உலக சுகாதார ஸ்தாபனத்தால் வழங்கப்பட்ட ஒரு தொகுதி தடுப்பூசிகள், தற் போது முன்னுரிமை அடிப்ப டையில் 60 வயதுக்கு மேற்பட் டவர்களுக்கு செலுத்தும் நட வடிக்கைகள் இடம்பெறு கின்றன. (எ)

## ரணில் தேவையான நேரத்தில் பாராளுமன்றத்துக்கு செல்வார்

### ஆசு மாரசிங்க கூறுகிறார்

கொழும்பு, மார்ச்.17

ஐக்கிய தேசியக் கட்சி தேசிய பட்டியல் உறுப்பினராக கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேவை யான நேரத்தில் பாராளுமன்றத்துக் குச் செல்வார் என எதிர்பார்க் கின்றோம்.

அவர் மறுத்துவிட்டால் பிரதித் தலைவர் செல்வார் என ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)



### வன்னி, கிண்ணியா உள்ளிட்ட

## காடழிப்பு பகுதிகளில் எஸ்.ரி.எவ். முகாம்கள்

கொழும்பு, மார்ச்.17

காடழிப்பு இடம்பெறு வதாக அடையாளம் காணப் பட்டுள்ள இடங்களில் பொலிஸ் விஷேட அதிரடிப் படையின் (எஸ்.ரி.எப்) முகாம்களை அமைக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

இதற்கமைய சோமாவதி வனம், கிண்ணியா மற்றும் வன்னிப் பகுதிகள் உள்ளிட்ட அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் பொலிஸ் விஷேட அதிரடிப்படையின் முகாம் களை ஸ்தாபிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட் டுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித் துள்ளது.

பல்வேறு தரப்பினரால் முன்னெடுக்கப்படும் காடழிப்பு நடவடிக்கைகளைத் தடுப்ப தற்காக இராணுவத்தின் ஒத்து ழைப்பை பெறவுள்ளதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள் ளது. (எ)

ஈழநாடு



# சிறுவர்களின் தலையை துண்டித்து ஐ.எஸ். அமைப்பினர் வெறிச்செயல்!

## மொசாம்பிக் நாட்டில் கொடூரம்

மபுடோ, மார்ச் 17

மொசாம்பிக்கின் வடக்கு மாகாணமான காபோ டெல்கடோவில் 11 வயது சிறுவர்களை ஐ.எஸ் அமைப்பினர் தலையை துண்டித்துக் கொல்கின்றனர் என்று சேவ் த சில்ட்ரன் அமைப்பு தெரிவித்துள்ளது.

தனது 12 வயது மகன் இந்த முறையில் கொல்லப்பட்டதை உதவி எதுவுமற்ற நிலையில் மற்றக் குழந்தைகளுடன் மறைந்திருந்து பார்க்க நேரிட்டதாக ஒரு தாய் அந்த நிறுவனத்திடம் கூறியுள்ளார்.

2017ஆம் ஆண்டு ஐ.எஸ் அமைப்பினரின் கிளர்ச்சி இந்தப் பகுதியில் தொடங்கியதில் இருந்து 2,500 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். 7 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வீடுகளை விட்டு வெளியேறினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சேவ் த சில்ட்ரன் அமைப்பின் அறிக்கையில், எல்ஸா என்ற பெயர் கொண்ட தாய் ஒருவர் தனது மூத்த மகன் எப்படி தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டார் என்பதை விவரித்துள்ளார்.

"அன்று இரவு எங்கள் கிராமம் தாக்கப்பட்டது. வீடுகள் எரிக்கப்பட்டன. இந்தச் செயல் தொடங்கியபோது நான் நான்கு குழந்தைகளுடன் வீட்டில் இருந்தேன். நாங்கள் காட்டுக்கு சென்று தப்ப முயன்றோம். ஆனால், அவர்கள் எனது மூத்த மகனைப் பிடித்து தலையை துண்டித்து விட்டார்கள். எங்களால் எதுவும் செய்யமுடியவில்லை. ஏனெனில் நாமும் கொல்லப்படுவோம்" - என்றார்.



மற்றொரு தாயரான அமெலியா, "எனது மகன் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டபோது மற்ற மூன்று பிள்ளைகளுடன் தப்பி ஓட வேண்டிய கட்டாயத்தில் இருந்தோம். எனது 11 வயது மகன் கொல்லப்பட்ட பின்னர் எமது கிராமத்தில் இருப்பது பாதுகாப்பில்லை என்பதால், வேறொரு கிராமத்தில் வசித்த எனது தந்தையின் வீட்டுக்கு ஓடினோம். ஆனால், சில நாட்களின் பின்னர், அவர்களின் தாக்குதல் அங்கேயும் தொடங்கி விட்டது. இவ்வாறு இடப்பெயர்வு முகாம்களில் தாய்மார்கள் சொன்ன துன்பக் கதைகளை கேட்ட எங்கள் ஊழியர்கள் கண்ணீர் விட்டார்கள். இந்த வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும்.

முன்னரும், கிராம மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த 50 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஐ.எஸ். அமைப்பின் கிளர்ச்சியை தணிக்க மொசாம்பிக் அரசாங்கம் சர்வதேச உதவியைக் கோரியுள்ளது. இதற்கமைய அமெரிக்கா அந்நாட்டு இராணுவத்துக்கு இரு மாத பயிற்சி மற்றும் மருத்துவ உதவிகளை அளிக்க முன்வந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பெண்கள், சிறுவர்கள் உட்பட 138 பேர் மியன்மாரில் கொலை!

## ஐ.நா. சபை அறிவிப்பு

நியூயோர்க், மார்ச் 17

மியன்மாரில் பெண்கள், சிறுவர்கள் உட்பட ஜனநாயக மீட்பு போராட்டக்காரர்கள் 138 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

மியன்மாரில் கடந்த பெப்ரவரி முதலாம் திகதி இராணுவம் ஆட்சியைப் பிடித்தது. அன்று தொடக்கம் பல ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றனர்.

இந்தப் போராட்டங்களை இராணுவம் வலிந்து அடக்கி வருகின்றபோதிலும், போராட்டங்கள் அங்கு ஓயவில்லை. இந்நிலையில், இவ்வாறு போராடி வருவோரில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 138 பேர் கொல்லப்பட்டனர் என்று ஐ.நா. பொதுச் செயலரின் செய்தி தொடர்பு அதிகாரி ஸ்ரெபனி டுஜாரிக் கூறியுள்ளார்.

மேலும், கடந்த ஞாயிற்றுக்கிழமை 38 பேரும், சனிக்கிழமை 18 பேரும் கொல்லப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)



# இந்தியா செல்கிறார் பிரிட்டன் பிரதமர்!

லண்டன், மார்ச் 17

பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் ஏப்ரல் மாத இறுதியில் இந்தியா செல்லவுள்ளார்.

பிரிட்டன் அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகிய பின்னர் பொறிஸ் ஜோன்சன் மேற்கொள்ளும் பெரிய சர்வதேச பயணம் இதுவாகும்.

முன்னதாக அவர், கடந்த ஜனவரியில் இந்தியா செல்லவிருந்தார். ஆனால், அப்போது பிரிட்டனை கொரோனா அலை தாக்கியதால் பயணத்தைத் தவிர்த்தார்.

ஐரோப்பிய ஒன்றிய வெளியேற்றத்தின் பின்னர், பிரிட்டன் வர்த்தக தொடர்புகளை விரிவுபடுத்த பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதேவேளை, அவுஸ்திரேலியா, கனடா, சிலி என 11 நாடுகள் அங்கம் வகிக்கும் ஆசிய பசுபிக் சுதந்திர வர்த்தக அமைப்பான டிரான் பசுபிக் கூட்டாண்மையிலும் இணைவதற்கு பிரிட்டன் விருப்பம் தெரிவித்துள்ளது. இதேபோன்று ஆசியான் கூட்டமைப்பிலும் ஆலோசகராக செயல்பட அந்நாடு விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பிரதமரின் இந்திய பயணம் முக்கியத்துவம் பெறுகின்றது. (ஐ)

# 65 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் கனடாவில் அஸ்ராஜெனகா தடுப்பூசி

ஒட்டாவா, மார்ச் 17

கனடாவில், 65 வயதுக்கு மேற்பட்டோருக்கு அஸ்ராஜெனகா கொரோனா தடுப்பூசியை வழங்க அந்நாட்டின் தேசிய நோய்த்தடுப்பு ஆலோசனைக் குழு எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது.

65 வயதுக்கு மேற்பட்டோருக்கு பைசர் பயோஎன்ரெக், மொடர்னா தடுப்பூசிகளை வழங்க முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று முன்னர் அந்த ஆலோசனைக் குழு முன்னர் பரிந்துரைத்தது.

எனினும், 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அஸ்ராஜெனகா தடுப்பூசி போடுவதால் எந்தப் பாதிப்பும் இல்லை என்று ஆய்வுகளில் தெரிய வந்ததாக ஹெல்த் கனடா தெரிவித்துள்ளது. இந்தத் தடுப்பூசிக்கு அங்கீகாரம் வழங்கிய நாடுகளில், 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, அஸ்ரா ஜெனகா தடுப்பூசி போடுவதால் இரத்தம் உறைதல் பாதிப்பு ஏற்படுவதாகக் கூறி நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட பத்திற்கும் மேற்பட்ட ஐரோப்பிய நாடுகள் இடைக்கால தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அஸ்ராஜெனகா தடுப்பூசி அச்சம்: பிரான்ஸும் இடை நிறுத்தியது!

## நோர்வேயில் பெண் உயிரிழப்பு!

பாரிஸ், மார்ச் 17

அஸ்ட்ரா ஜெனகா தடுப்பூசி ஏற்றுவதை உடனடியாக பிரான்ஸும் இடை நிறுத்தியுள்ளது. மறுஅறிவித்தல் வரை இந்த இடைக்கால தடை தொடரும் என்று அந்நாட்டு ஜனாதிபதி இமானுவல் மக்ரோன் அறிவித்துள்ளார்.



"அஸ்ராஜெனகா" தடுப்பூசிப் பயன் பாட்டை இடைநிறுத்துவது என்ற ஜேர்மனியின் அறிவிப்பு வெளியான கையோடு பிரான்ஸின் இந்தத் தீர்மானத்தை ஜனாதிபதி மக்ரோன் வெளியிட்டிருக்கிறார். ஆய்வுக்குப் பின்னர் மிக விரைவிலேயே அதன் பாவனை மீளத் தொடங்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். பிரான்ஸ் - ஸ்பெயின் நாடுகளின் 26 ஆவது மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அரசுத் தலைவர் மக்ரோன், அங்கு வைத்தே இந்தத் தீர்மானத்தை அறிவித்தார்.

இதேவேளை, நோர்வேயில் தடுப்பூசி ஏற்றிய பின்னர் சுகவீனமுற்ற மூன்று பெண்களில் ஒருவர் உயிரிழந்தார் என்று அந்நாட்டின் சுகாதார அதிகாரிகள் நேற்றுமுன்தினம் இரவு அறிவித்தனர். 50 வயதுக்குக் குறைந்த பெண் சுகாதாரப் பணியாளர் ஒருவரே மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவு காரணமாக உயிரிழந்தார். அஸ்ராஜெனகா தடுப்பூசி ஏற்றுவதை நோர்வே உட்பட பத்துக்கும் மேற்பட்ட நாடுகள் இடைநிறுத்தி உள்ளன. (ஐ)

# அஸ்ராஜெனகா தடுப்பூசியை இடைநிறுத்த வேண்டாம்!

## உலக சுகாதார ஸ்தாபனம்

ஜெனிவா, மார்ச் 17

அஸ்ராஜெனெகா தடுப்பூசி பயன்பாட்டை இடைநிறுத்த வேண்டாம் என்று உலக நாடுகளை உலக சுகாதார ஸ்தாபனம் கேட்டுள்ளது.

அஸ்ராஜெனெகா தடுப்பூசியைப் போட்டுக்கொண்ட சிலருக்கு இரத்தம் உறைவு பாதிப்பு ஏற்பட்டதாக வெளியான தகவல்களை அடுத்து பத்திற்கும் மேற்பட்ட ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இந்தத் தடுப்பூசி போடும் பணிகளை இடைநிறுத்தியுள்ளன.

இந்நிலையில், அஸ்ராஜெனெகா தடுப்பூசிக்கும் இரத்த உறைவு சிக்கலுக்கும் இடையே எந்தத் தொடர்பும் இருப்பதற்கான ஆதாரங்கள் இல்லை என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உலக சுகாதார ஸ்தாபனத்தின் தடுப்பூசி பாதுகாப்பு நிபுணர்கள் கூடி ஆராயவுள்ளனர். (ஐ)



# பயிற்றுவிப்பாளரானார் இங்கிலாந்தின் சாரா!

லண்டன், மார்ச் 16

இங்கிலாந்து மகளிர் அணியின் விக்கெட் காப்பாள ரான சாரா ரெய்லர் பயிற்றுவிப்பாளராக இணைந்துள்ளார். இங்கிலாந்தின் சசெக்ஸ் கிரிக்கெட் ஆண்கள் அணியின் பயிற்றுவிப்பாளராக அவர் செயல்பட வுள்ளார்.

சசெக்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளராக இயன் சலிஸ்பரி செயல்பட்டு வரும் நிலையில், அவருடன் இணைந்து பயிற்றுவிப்பாளராக சாரா செயல்படவுள்ளார். இதனை இயன் சலிஸ்பரியும் வரவேற்றுள்ளார்.

அனைத்துக் காலத்திலும் சிறந்த விக்கெட் காப்பாளர்களில் ஒருவராகக் கருதப்படுபவர் சாரா. தனது தனிப் பட்ட பிரச்னைகளால் அவதிப்பட்டு வந்த அவர் 30ஆவது வயதில் - 2019ஆம் ஆண்டு கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

சாரா ரெய்லர் தனது 13 வருட சர்வதேச கிரிக்கெட் வாழ்வில் 226 போட்டிகளில் விக்கெட் காப்பாளராக செயல்பட்டு 227 ஆட்டமிழப்புக்களை செய்துள்ளார். அத்துடன் 6,500 இற்கும் மேற்பட்ட ஓட்டங்களையும் குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மெஸ்ஸி புதிய சாதனை!

பார்ஸிலோனா, மார்ச் 17

உதைபந்தாட்ட ஜாம்பவான்களில் ஒருவரான லயனல் மெஸ்ஸி, முன்னாள் ஜாம்பவான் சேவி ஹெர் னாண்ட்ஸின் சாதனையை சமன் செய்துள்ளார். அவர் கடந்த திங்கட்கிழமை பார்ஸிலோனா அணிக்காக 767ஆவது போட்டியில் விளையாடிதன் மூலம் இதனை சாத்தியமாக்கினார்.

சேவி ஹெர்னாண்ட்ஸ் கழக அணிகளில் பார்ஸிலோனாவுக்காக அதிக போட்டிகளில் விளையாடிய வீரர் என்ற பெருமையை பெற்றிருந்தார். இவர் 2015இல் பார்ஸிலோனா அணியை விட்டு கட்டாரின் அல்சதில் அணிக்காக விளையாடச் சென்றார். 2019இல் விளை யாட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஹூஸ்கா அணிக்கு எதிராகக் களமிறங்கிய மெஸ்ஸி இந்த சாதனையை சமன் செய்துள்ளார்.

இந்தப் போட்டியில் மெஸ்ஸி 19, 90ஆவது நிமிடங்களில் இரு கோல்களை அடித்தார். இதனால் அந்தப் போட்டியில் 4 - 1 என்ற கோல் கணக்கில் பார்ஸிலோனா அணி வெற்றி பெற்றது.

767ஆவது போட்டியில் களமிறங்கிய மெஸ்ஸிக்கு வீரர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். பார்ஸிலோனா அணியும் தனது உத்தியோகபூர்வ பக்கத்தில் வாழ்த்தியுள்ளது.




இதேவேளை, வரும் ஞாயிற்றுக்கிழமை லா லிகா தொடரில் ரியல் சொசிடட் அணிக்கு எதிராக மெஸ்ஸி களமிறங்கவுள்ளார். இதன் மூலம் பார்ஸிலோனா அணிக்கு எதிராக அதிக போட்டிகளில் பங்கேற்ற முதல் வீரர் என்ற பெருமையையும் அவர் பெறுவார். (ஐ)



*ஜாம்பவான்களின் ரி - 20:*

# தென்னாபிரிக்கா அபார வெற்றி!

ராஜ்பூர், மார்ச் 17

அன்ட்ரூ புட்ரிக், மோர்ன் வான் வைக் ஆகியோரின் அதிரடி அரைச் சதங்களின் உதவியால் பங்களாதேஷ் ஜாம்பவான்கள் அணியை 10 விக்கெட்களால் வெற்றி கொண்டது தென்னாபிரிக்க ஜாம்பவான்கள் அணி.

வீதிப் பாதுகாப்பை வலியுறுத்தி உலக முன்னாள் ஜாம்பவான்கள் பங்கேற்கும் இருபது - 20 தொடர் இந்தியாவின் ராஜ்பூரில் நடக்கிறது.

இதில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த ஆட்டத்தில் பங்களாதேஷ், தென்னாபிரிக்க அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனால், துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு நஷிமுதீன் 32, அப்தாப் அஹமட் 39, ஹனன் சர்கார் 36, மொஹமட் ரபிகியு 19 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். இதனால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 160 ஓட்டங்களை பங்களாதேஷ் பெற்றது.

தென்னாபிரிக்கா சார்பில் பந்து வீசிய தண்டி ரிஷபாலா, மொகாயா நிற்னி ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

இலகுவான இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு அன்ரூ புட்ரிக், மோரன் வான் வைக் இணை தொடக்கம் கொடுத்தது.

அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்த இணை 19.2 ஓவர்களில் 161 ஓட்டங்களை குவித்து அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது.

புட்ரிக் 9 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 54 பந்துகளில் 82 ஓட்டங்களையும், மோர்ன் வான் 62 பந்துகளில் 9 பௌண்ட்ரிகள் அடங்கலாக 69 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர்.

இதனால், தென்னாபிரிக்க அணி 10 விக்கெட்களால் பெரு வெற்றி பெற்றது. (ஐ)

# இலங்கைக்கு அபராதம்!

அன்டிகுவா, மார்ச் 17

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இறுதி ஒருநாள் போட்டியில் பந்து வீசுவதற்கு தாமதம் செய்தமைக்காக இலங்கை அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கை அணிக்கு அவர்களின் போட்டி கட்டணத்தில் இருந்து 40 வீதத் தொகை அபராதமாக விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதனிடையே, இந்தப் போட்டியில் வீரர்களுக்கான நடத்தை விதியை மீறியமைக்காக தனுஷ்க குணதிலகவை ஐ.சி.சி. எச்சரித்துள்ளது.

அவர், 35 ஆவது ஓவரில் நிக்கொலஸ் பூரணை ஆட்டமிழக்கச் செய்தபோது அவரிடம் பொருத்தமற்ற வசனத்தை பயன்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. (ஐ)

# தமிழ் பெண்ணை மணந்தார் இந்திய வீரர் ஜஸ்பிரித் பும்ரா



புதுடில்லி, மார்ச் 17

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் பும்ரா நேற்று முன்தினம் திங்கட்கிழமை திருமண பந்தத்தில் இணைந்தார்.

பும்ரா - மொடல் அழகியும் தொலைக்காட்சி தொகுப்பாளினியுமான சஞ்சனா கணேசன் என்பவரை திருமணம் செய்தார். இருவரதும் திருமண நிகழ்வு நேற்று முன்தினம் கோவாவில் இடம்பெற்றது.

மட்டுப்படுத்தப்பட்ட விருந்தினர்களுடன் குறித்த திருமணம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருவருக்குமிடையில் திருமணம் இடம்பெற்றதையடுத்து முதலாவது படத்தை பும்ரா தனது இன்ஸ்ட்ராகிராம் பக்கத்தில் பதிவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரசாங்கம் புர்கா விடயத்தில் அவசரப்பட்டு முடிவு எடுக்காது!

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



**கொழும்பு, மார்ச்.17**

**புர்கா மற்றும் நிஹாப் ஆகியவற்றை தடைசெய்யும் தீர்மானம் தொடர்பில் அரசாங்கம் விரைவாக முடிவுகளை மேற்கொள்ளாது என அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற வாராந்திர அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு முன்மொழியப்பட்டுள்ள புர்கா மற்றும் நிஹாப் ஆகியவற்றுக்குத் தடை விதிக்கும் தீர்மானம் தொடர்பில் எந்த முடிவும் விரைவாக எடுக்கப்படமாட்டாது.

தற்சமயம் அந்த விடயம் பரிசீலனையில் உள்ளது. எவ்வாறெனினும் அது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று, அனைவரது ஒருமித்த கருத்துக்களின் பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, புர்கா அணிவதற்குத் தடை விதிப்பதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அண்மையில் கையொப்பமிட்ட அமைச்சரவைப் பத்திரம் நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ)



# அம்பாறையில் 6 ஏக்கரில் கஞ்சா செய்கை - அழிப்பு

*அம்பாறை, மார்ச்.17*

அம்பாறை பக்மிடியாவ பகுதியில் 6 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட கஞ்சா செய்கை கிழக்கு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் கீழ் உள்ள இலங்கை இராணுவத்தின் முதலாவது கொமாண்டோ படைப்பிரிவு வீரர்களால் சோதனையிடப்பட்டு அழிக்கப்பட்டது.

கஞ்சா செய்கை குறித்து கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய பொலிஸாருடன் இணைந்து இந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)



# யாழில் தொடர் போராட்டம்: மாவை சேனாதிராசா ஆதரவு!

*யாழ்ப்பாணம், மார்ச்.17*

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று 17ஆவது நாளாக தொடர்ந்தது.

சர்வதேச நீதி வேண்டிய இந்தப் போராட்டம் நல்லை ஆதீனம் முன்பு யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இந்தப் போராட்டத்துக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்று ஆதரவு வழங்கியிருந்தார். (எ)

### ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்:

# அறிக்கையை ஆய்வுசெய்ய நியமித்த குழுவின் அறிக்கை இரு வாரங்களில்!



*கொழும்பு, மார்ச்.18*

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலும், தேசிய பாதுகாப்பு தொடர்பான துறை மேற்பார்வைக் குழுவின் அறிக்கை தொடர்பிலும் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்க நியமிக்கப்பட்ட குழுக்களின் அறிக்கை இரு வாரங்களில் சமர்ப்பிக்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ள நடவடிக்கைகளின் போக்குகள் பற்றிய உண்மைகளையும் பரிந்துரைகளையும் ஆராய்வதற்கு குறித்த குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக ஓ-பைல்ஸ் என அழைக்கப்படும் இரகசிய பொருள்கள் உள்ளிட்ட தேவையான ஆவணங்களும் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (எ)

# ‘யாழில் இன்று இடம்பெறும் பேரணி வெற்றிபெற ஒத்துழைப்பு வழங்குக’

## மக்களிடம் மணிவண்ணன் கோரிக்கை

*யாழ்ப்பாணம், மார்ச்.17*

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறும் போராட்டம் மற்றும் பேரணியில் வடக்கு - கிழக்கு மக்கள் உணர்வுபூர்மாக கலந்து கொண்டு போராட்டம் வெற்றிபெற ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்க வேண்டும் என யாழ். மாநகர சபை முதல்வர், சட்டத்தரணி வி.மணிவண்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பேரணி தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

‘யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் யாழில் சுழற்சி முறையிலான போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் ஊடாக விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என்றும், தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களான தேசியம், தாயகம் ,சுயநிர்ணய உரிமை என்பவற்றை அங்கீகரிக்கும் வகையில் தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இன்று புதன்கிழமை கிட்டுப்பூங்காவிலிருந்து நல்லூரில் உண்ணா விரதம் முன்னெடுக்கப் பட்டு வரும் திடல் வரையில் ஓர் பேரணியை பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். அந்தப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறு மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, இந்தப் போராட்டத்தில் உணர்வுபூர்மாக கலந்துகொண்டு போராட்டம் வெற்றிபெற ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்க வேண்டும் என்று வடக்கு - கிழக்கு தமிழ் மக்களிடம் அன்போடும் உரிமையோடும் வேண்டுகோள் விடுக்கின்றேன்- என்றார். (எ)



ஈழநாடு
Eelanadu

# புர்காவுக்கு தடை விதித்தால் இலங்கை தனிமைப்படும்!

## எச்சரிக்கிறார் ரிஷாத் எம்.பி.

கொழும்பு, மார்ச் 17

புர்காவை தடை செய்யும் தீர்மானத்தை அரசாங்கம் உடனடியாக வாபஸ் பெற வேண்டும் அத்துடன், இனவாதிகளை திருப்திப்படுத்தும் இவ்வாறான செயல்பாடுகள், சர்வதேசத்திலிருந்து எமது தாய் நாட்டை தனிமைப்படுத்தும் சூழலையே ஏற்படுத்தும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், "முஸ்லிம்களை இலக்கு வைக்கும் நிகழ்ச்சி நிரல்களை, அரசாங்கம் கைவிடுவதாகத் தெரியவில்லை. ஆட்சிக்கு வர உதவிய இனவாதிகளை திருப்திப்படுத்தவே, இந்த நிகழ்ச்சி நிரல்கள் தயாரிக்கப்படுகின்றன. கொரோனா சூழ்நிலையில் முகக்கவசம், மூக்கை மறைத்தல் என்பன கடைப்பிடிக்கப்படும் காலமிது. இதைக் கூடப் புரிந்துகொள்ளாமல், முஸ்லிம்களைப் பழிவாங்கும் மனநிலையில்தான் இந்த அரசு நடந்துகொள்கிறது.

அரபு நாடுகளின் நண்பன் எனக் கூறும் இந்த அரசாங்கம், அரபு நாடுகளிலும் முஸ்லிம் உலகிலும் விரும்பப்படும் ஆடைகளுக்கு அடிப்படைவாதச் சாயம் பூசுவது, விந்தையாகவும் வேடிக்கையாகவும் உள்ளது. ஒரு கலாசாரத்தின் நம்பிக்கையில் கை வைக்குமளவுக்கு அரசாங்கம் கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகிறதே ஏன்? ஏனையோரின் நம்பிக்கைகளுக்கு இந்நாட்டில் இனி இடமில்லை என்றா எச்சரிக்கின்றனர்?

பயங்கரவாதம் கோலோச்சிய காலத்திலும், ஏன், இறுதிக்கட்ட யுத்தத்திலும்கூட, புர்கா மற்றும் ஹிஜாப் போன்ற முஸ்லிம்களின் கலாசார ஆடைகளுக்குத் தடை விதிக்கப்படவில்லை. இன்று, இதை அவசரமாகச் செய்யத் துணிவது பழிவாங்கலுக்காகவே.

இந்த தடை வருமாக இருந்தால், முஸ்லிம் நாடுகளிலிருந்து மட்டுமல்ல, முகத்தை மறைக்கும் எந்தவொரு முஸ்லிம் பெண்ணும், உல்லாசப் பயணியாக இலங்கைக்கு வரப்போவதில்லை. எமது நாட்டின் சுற்றுலாத்துறையில் இது பாதிப்பை ஏற்படுத்தி, அந்நியச்செலாவணியில் பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தும் என்பதை அரசாங்கம் புரிந்துகொள்வது அவசியம்.

ஒவ்வொரு விடியற்காலையிலும் ஏதோவொரு இடியோசைச் செய்தியையே முஸ்லிம்கள் கேட்க நேரிடுகிறது" என்றும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

## யாழில் போராட்டத்தில் ஈடுபட்ட

# மற்றொரு சுகாதார தொண்டரின் உடல்நிலை கடுமையாக பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மற்றுமொரு பெண் சுகாதார தொண்டர் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் நேற்றுக்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மூன்று பெண் சுகாதாரத் தொண்டர்கள் மயக்கமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மேலும் ஒரு பெண் சுகாதார தொண்டர் மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.



தொடர்ந்து 16 நாட்களாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் சுகாதாரப் தொண்டர்கள் கடந்த 8 நாட்களாக உண்வு தவிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டு வந்திருந்த நிலையில் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண ஆளுநர் குறித்த சுகாதாரப் பணியாளர்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

கலந்துரையாடலின்போது ஜனாதிபதியுடன் கதைத்து தீர்வைப் பெற்றுத் தருவதாக தெரிவித்தது மாத்திரமன்றி அதனை எப்போது பெற்று தருவது என உறுதிமொழி வழங்கவில்லை எனத் தெரிவித்து சுகாதாரப் பணியாளர்கள் தொடர்ந்தும் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# ஓட்டமாவடி கொரோனா மயானத்தில் கத்தோலிக்க பெண்ணும் நல்லடக்கம்

மட்டக்களப்பு, மார்ச் 17

ஓட்டமாவடியில் கொரோனா தொற்றால் மரணிக்கும் முஸ்லிம்களை அடக்கம் செய்யும் பிரதேசத்தில், முதன் முறையாக கத்தோலிக்கப் பெண் ஒருவரின் சடலமும் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்துத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் நஸிர் அஹமட், இது நாட்டின் இன ஐக்கியத்துக்கும் மனிதாபிமானம் மரணித்துவிடவில்லை என்பதற்கும் சிறந்த சான்றாக அமைந்திருக்கிறது" என்று தெரிவித்தார்.

ஜா-எலையைச் சேர்ந்த 60 வயதான அந்தப் பெண்மணி, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய நிலையில் ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி மார்ச் 08ஆம் திகதி மரணமானார்.

அவரின் உடல் கடந்த சனிக்கிழமை ஓட்டமாவடியில் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டுவரும் சூடு பத்தினசேனை பிரதேசத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பல்வேறு பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளின் சவச்சாலைகளில் வைக்கப்பட்டிருந்த கொரோனா பூதவு டல்கள் 45 ஓட்டமாவடி பிரதேசத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, கொவிட்-19 னால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு இன, மத பேதமின்றி அனுமதி வழங்கப்படுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.




# மியன்மார் இராணுவ ஆட்சியோடு இலங்கை உறவு வைக்கவேண்டாம்

## மட்டக்களப்பில் நேற்று கவனவீர்ப்பு

மட்டக்களப்பு, மார்ச் 17

மியன்மார் இராணுவ ஆட்சியோடு இலங்கை அரசு உறவாட வேண்டாம் எனவும் மியன்மாரில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் பாதுகாக்குமாறும் கோரி மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த கவனயீர்பு ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த சிவில் அமைப்புகள், போரினால் பாதிக்கப்பட்ட சமூகப்பிரிவினர், பெண்கள் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இலங்கையின் சிவில் அமைப்பினரும் பொதுமக்களுமான நாம் ஐ.நா.வுடனும் உலகின் ஜனநாயக நாடுகளுடனும் கூட்டிணைந்து மியன்மாரில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் பாதுகாக்குமாறும், மியன்மாரின் கொலைகார, சட்டபூர்வமற்ற இராணுவ ஆட்சியுடன் உறவாடவேண்டாம் என்றும் இலங்கை அரசுக்கு வலியுறுத்துகிறோம் என்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் மட்டக்களப்பு இணைப்பாளரிடமும், மட்டக்களப்பு அரசாங்க அதிபரிடம் மகஜர்களையும் கையளித்தனர்.

# தடுப்பூசி ஏற்றிய ஜப்பான் பிரதமர்

ரோக்கியோ, மார்ச் 17

ஜப்பானிய பிரதமர் யோஷிஹைட் சுகா, கொவிட்-19 தடுப்பூசியின் முதல் டோஸ்ஸை பெற்றுள்ளார்.

அடுத்த மாதம் ஜப்பான் பிரதமரின் அமெரிக்கப் பயணத்துக்கு முன்னதாக ஜப்பானின் 80 முதல் 90 அதிகாரிகள் வரை தடுப்பூசி பெற்றுக் கொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அமெரிக்கா செல்லும் பிரதமர் யோஷிஹைட் சுகா, ஜனாதிபதி ஜோ பைடனுடன் சந்திப்பை மேற்கொள்வார். இதனால் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அவரைச் சந்தித்த முதல் உலகத் தலைவர் என்ற பெயரையும் யோஷி ஹைட் சுகா பெறுவார்.







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லவீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக. சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதை வழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : பாரதீ-பெண்கள் உளவியல்



12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
**பகல்**
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்
**இரவு**
7.00 மணி : COFFE WITH பிரமுகர் - தேனுகா கருணாகரன்(இசைத்துறை)



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்
**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருகோணமலை பத்திரகாளி அம்மன் கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : யாழ்ப்பாணம் காரைநகர் வேல் முருகன் கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருகோணமலை பத்திரகாளி அம்மன் கோவில் திருவிழா

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடலகள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை
**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்
**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்
**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்